விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 04 செவ்வாய்க்கிழமை (18.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 89

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## புலிகளின் கப்பல் மீதான தாக்குதல் சம்பவம்

# அரசும் புலிகளும் பொறுப்புடன் நடந்து மோதல்களைத் தவிர்க்க வேண்டும் !

### கண்காணிப்புக்குழு அறிக்கையில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**முல்லைத்தீவு கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் ஒரு தரப்பினரையும் குற்றம் சாட்ட முடியாத நிலையிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் கையளித்துள்ள தனது விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

முல்லைத்தீவு கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்று கடந்த 10ம் திகதி இலங்கை கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டும் 11 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு பூரண விசாரணைகளை மேற் கொண்ட பின் அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் கையளித்துள்ள விசாரணை அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பினரிடையேயும் குற்றம் காணாத வகையில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும்
(10ம் பக்கம் பார்க்க)

## புலிப் போராளிகள் ஆறு பேர் நேற்றுப் பிணையில் விடுதலை

(திருகோணமலை)

ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த நவம்பர் மாதம் 10ம் திகதி திருகோணமலையில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 6பேர் நேற்றுத் திருகோணமலை மாவட்ட நீதிவான் அன்ரன் பாலசிங்கத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்குதல் செயயப்பட்டிருந்தது. இதனை கொழும்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதிகளான ராஜா பெர்ணான்டோ,ரி.டபிள்யு எதிரிசூரியா ஆகியோர் ஏற்றுக் கொண்டு பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டிருந்தனர்.

எனினும் பிணை மனுத் தொடர்பாக அனுமதி நேற்றைய தினமே திருகோணமலை நீதிபதிக்குக் கிடைத்தது. இதனையடுத்து மேல் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய ஒவ்வொருவரையும்25 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்துள்ளார். (இ-5)

## மேலும் புலிகள் மூவர் பிணையில் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகத்தை அண்டிய அதியுயர் பாதுகாப்பு வலய கடற் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மூன்று விடுதலைப் புலிப் போராளிகள் நேற்று அதி காலை கைது செய்யப்பட்டு,பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை திருகோணமலை மாவட்ட நீதிவான் அன்ரன் பாலசிங்கத்தின் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது நீதிவான் இவர்களை பிணையில் செல்ல அனுமதித்துள்ளார். (இ-5)

## மட்டக்களப்பில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்டமை மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக அங்கீகரிக்கப்படாமை என்பவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

மட்டக்களப்பு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இப்போராட்டத்தினால் இயல்பு நிலை பாதிக்கபட்டிருந்தது(இ)

## கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் பற்றி முதலில் பேசப்படும்

### யப்பானில் இருந்து அமைச்சர் பீரிஸ்

(ரோக்கியோ)

இன்றைய பேச்சுவார்த்தையில் இலங்கைக் கடற்படையினரால் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட விடயம் தொடர்பாகவே முதலில் பேசப்படும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறுகையில் இந்தச் சம்பவம் காரணமாக முறுகல் நிலை ஒன்றும் உருவாகியுள்ளது அந்த முறுகல் நிலையை உடனடியாகத் தீர்ப்பது தான் நல்லது ஆனால் அதை மூடி மறைப்பதில் பயன்இல்லை.இந்த விவகாரம் குறித்து விவாதித்து முடிவுக்குவரமுடியும் என்றே நான் கருதுகிறேன்.அப்படிச் செய்தால்தான் அடுத்த மூன்றாம் நாள் பேச்சுவார்த்தையின் போது முக்கியமான விடயங்கள் குறித்து விவாதித்து பயனுள்ள முடிவுகளை எடுக்க முடியும்.

அதாவது,அந்த நாட்களில் மனித உரிமை விவகாரங்கள்,அதிகாரப் பகிர்வு மற்றும் அதிகாரப் பரவலின் பொருளாதாரம் பற்றி விவாதிக்கவுள்ளோம்.

அரசு-புலிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்திஅமைப்பதற்கான தேவை இருப்பதாக நான் கருதவில்லை.

நிலப்பகுதியில் மோதல் சூழல் தவிர்ப்பது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.கடல் நடவடிக்கை குறித்து இருதரப்புக்குமிடையிலான
(10ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பேச்சுவார்த்தை இன்று யப்பானில் ஆரம்பம்

(ரோக்கியோ)

இலங்கை அரசுக்கும்,தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான 6வது சுற்றுப் பேச்சுவார்த்தை இன்று யப்பானில் ஆரம்பமாகவுள்ளது.

யப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஹக்கோண் என்னும் இடத்தில் உள்ள பிறின்ஸ் விடுதியில் யப்பான் நேரப்படி இன்று பிற்பகல் 3மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாக உள்ளன.

இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கென அரசு தரப்பில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் அரச குழுவும் விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் விடுதலைப் புலிகளின் குழுவும் ஏற்கனவே யப்பான் சென்றுள்ளனர்.

இன்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகமுன் இன்று காலை 8மணிக்கு யப்பான் சிறப்புத் தூதுவர் ஜசூசி அஹாசியை அன்ரன் பாலசிங்கம் சந்தித்துப் பேசவுள்ளார்.இப் பேச்சுக்களை அடுத்து இரு தரப்பு பிரதிநிதிகளுக்கும் யப்பான் தூதுவர் ஜசூசி அகாசி மதிய போசன விருந்து வழங்கிக் கௌரவித்தார்.

மதிய போசன விருந்தை அடுத்து பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தையில்முல்லைத்தீவுக் கடற்பகுதியில் புலிகளின் தாக்கப்பட்ட
(10ம் பக்கம் பார்க்க)

## இன்றைய பேச்சில் யுத்த நிறுத்த உடன்பாட்டில் கவனம் செலுத்தப்படும்

### விடார் ஹெல்கீஸன்

(நமது நிருபர்)

இன்று யப்பானில் ஆரம்பமாகவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையின் போது யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்பாகவே கவனம் செலுத்தப்படவுள்ளதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

இன்று யப்பானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பாக விடார் ஹெல்கிஸன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசியல் ரீதியான பேச்சுக்களில்,கள நிலவரங்களை சமாளிக்கக் கூடியவாறு பேச்சுக்கள் அமைய வேண்டும். மோதல்கள் ஏற்படும் போது அதனைத் தவிர்க்கும் விதிமுறைகளைத் தயாரிக்க வேண்டும் என்றும் நெருக்கடி நிலை, அவசர நிலை ஏற்படுமானால் முக்கிய அரசியல் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக அமையலாம் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## வடகிழக்கில் 'வருணஹிரண' நடவடிக்கை விஸ்தரிக்கப்படும்

### கடற்படையினர் தகவல்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் கடற்படையினரின் ''வருணஹிரண'' ரோந்து நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாக, கடற்படையின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடற் புலிகளின் நடமாட்டங்களைத் தடுத்து நிறுத்தும் வகையில், நெடுந்தீவு முதல் வாகரை வரை ரோந்து நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்தே, இவ் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொளளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த காலங்களில வருண ஹிரண நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினரின் அதிவேகப் படகுகள் கடற்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## புலிகளோடு தொடர்பு வைத்திருப்பது தவறான நடவடிக்கை அல்ல

### உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புகளை வைத்திருப்பது எவ்வகையிலும் தவறான ஒரு விடயமல்ல.

இவ்வாறு உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹொரபோயிட் தெரிவித்துள்ளார்.

தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புகளைப் பேணுவது சட்டபபடி குற்றமென்று,வெளியான குற்றச்சாட்டுக்களை அடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில; வடக்கு கிழக்கு பகுதிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமென்றால்,விடுதலைப் புலிகளோடு தொடர்புகளை ஏற்படுத்தியேயாக வேண்டும்.

தீவிரவாத இயக்கமாக முன்னர் வர்ணிக்கப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கம்,ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகியவற்றுடன் கூட
(10ம் பக்கம் பார்க்க)




# இந்தியாவை எதிர்கொள்ள நேரிட்டால் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச் செய்வேன்

## அவு.வீரர் பிரெட்லீ சவால்

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்திய அணியைச் சந்திக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தும் பட்சத்தில் 'றிவேஸ் ஸ்விங்' விதத்தில் பந்து வீசி சச்சின் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச் செய்வேன் என அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் பிரெட்லீ சவால் விடுத்துள்ளார்.




அவர் மேலும் கூறுகையில்; என் சகோதரர் ஷேன்லீ யிடமிருந்து எவ்வகையான பந்துகளை எவ்வாறு வீசுவதென கற்றுக் கொண்டுள்ளேன். எனது பந்துவீச்சில் மிக முக்கிய அம்சமாக இது அமையும். இவ்வகைப் பந்து வீச்சின் மூலம் ரெண்டுல்கரின் இலக்கை சாய்க்க முடியும்.

இந்தியாவுடன் தான் இறுதியாட்டம் என உறுதியாகி விட்டால் நாம் அனைவரும் ஒன்று கூடி இந்திய அணியின் முன்வரிசை வீரர்களை எப்படி வீழ்த்துவது என கலந்தாலோசிப்போம். சச்சின் போன்ற முன்னணி வீரர்களுக்கு பந்து வீசுவது என்பது கிரிக்கெட்டுக்கே சவால் விடுவதைப் போன்றதாகும் என்றார்.

தென்னாபிரிக்கா மைதானங்களில் 'றிவேர்ஸ் ஸ்விங்' பந்து மிகவும் உபயோகமானது. போர்ட் எலிசெபத்தில் நியூசிலந்துடனான சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் 5 இலக்குகளைச் சாய்ப்பதற்கு இவ்வகை பந்தே பெரிதும் உதவியது. இதற்கு முன்னர் வசீம் அக்ரம், வக்கார் யூனிஸ் ஆகியோரது 'றிவேர்ஸ் ஸ்விங்' பந்து வீச்சுக்களை பார்த்து நான் வியந்திருக்கின்றேன். 40 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவுள்ள பின்னரும் அந்தப் பந்தை ஸ்விங் செய்யவைக்கும் திறமை அவர்களிடம் உள்ளது ஆச்சரியமளிக்கிறது என்றார்.

எதிரணி வீரர்களை காயப்படுத்துவதற்காக சில பந்துகளை வீசுகின்றர்களே என்ற செய்தியாளரின் கேள்விக்கு எதிரணி வீரர்கள் மீது நான் வெறுப்புக் கொள்வதில்லை. அவர்களை காயப்படுத்தும் நோக்கத்தில் பந்து வீசுவதும் இல்லை. எதிரணி வீரர்களை அச்சுறுத்திப் பணிய வைப்பதற்காக பந்து வீச்சாளர்கள் எகுறும் பந்து வீச்சுக்களை (Bouncer) வீசுவது வழக்கம். ஆயினும் தற்போது அத்தகைய பந்து வீச்சுக்களை எதிர் கொள்ள வீரர்கள் பழகி விட்டனர் என்றார்.



இதேவேளை லீயின் பந்து வீச்சில் இலங்கை அணித்தலைவர் ஜெயசூரியா மற்றும் கென்ய வீரர் ஒபுயா ஆகியோர் காயமடைந்தமை தெரிந்ததே. (த-55)

# இலங்கை அணியை எவ்விதத்திலும் குறைத்து எடைபோட முடியாது

## அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங்

இலங்கை அணியை எந்த நேரமும் எவ்விதத்திலும் குறைத்து எடை போட முடியாது. ஆயினும் ஜெயசூரியா, முரளி ஆகியோர் இவ் ஆட்டத்தில் எமக்கு சிம்ம சொப்பனமாக திகழ்வர் என எதிர்பார்ப்பதாக அவுஸ்திரேலிய அணித்தலைர் பொண்டிங் கூறியுள்ளார்.

இம்முறை உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியின் முதல் அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலிய அணியை எதிர்த்து 1996ம் ஆண்டு உலகக் கிண்ணச் சம்பியனான இலங்கை அணி பி.ப 2.00மணிக்கு போர்ட் எலிசெபத் மைதானத்தில் மோதவுள்ளது. இவ் ஆட்டத்தில வெற்றிபெறும் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். இச் சுற்றுப் போட்டியில் எந்தவொரு ஆட்டத்திலும் தோல்வியுறாத அவுஸ்திரேலிய அணியும் தட்டித் தவறி அரையிறுதிக்கு தகுதி பெற்ற இலங்கை அணியும் எதிர்த்து ஆடுகின்றன.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் அதிஷ்டமும் கூட இருப்பது போல் தெரிகிறது. போர்ட் எலிசெபத் மைதானம் சுழல் பந்து வீச்சுக்கு சாதகமாக இருப்பதால் முரளி, அரவிந்த,சனத் ஆகியோரின் கைகளிலேயே அரையிறுதி தவழ்கிறது. களநிலைமையை சாதகமாக பயன்படுத்தி சுழல் பந்து வீச்சாளர்கள் ஆட்டப் போக்கை மாற்றியமைப் பார்களா? (த-55)



மகன் ஹாரிஸனை சுமந்தபடி கையெழுத்திடும் கில்கிரிஸ்ட்

# அவுஸ்திரேலியாவின் வெற்றியை தடுத்து நிறுத்தும் ஆற்றல் சச்சினிடமே உள்ளது

## தென்னாபிரிக்க முன்னாள் வீரர் பொலக்

அவுஸ்திரேலியாவின் தற்போதைய தொடர் வெற்றியை தடுத்து நிறுத்தும் ஆற்றல் இந்திய நட்சத்திரம் டெண்டுல்கரிடம் தான் உள்ளதென தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரரான ஹரீம் பொலக் கூறியுள்ளார்.

ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் எவ்வணி வெல்லும் என்பதை யாராலும் உறுதியாக கூற முடியாது. எனினும் தற்போதைய நிலையில் உலகக் கிண்ணத்தை வெல்ல அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு வாய்ப்புள்ளது. ஏதாவது ஒருசமயத்தில் அவுஸ்திரேலியாவின் வெற்றியை இலங்கை அல்லது இந்திய அணி தடுத்து நிறுத்தும். இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுடனான ஆட்டங்களில் தோல்வியின் விளிம்புக்குச் சென்று அவுஸ்திரேலியா மீண்டிருந்தது.


அணிகளுக்கான அர்ப்பணிப்பு மனோபாவமும் மனக்கட்டுப்பாடும் நிறைந்த வீரராக திகழும் சச்சின் ஓட்டங்களைக் குவிக்கும் தாகம இருந்தாலும் தனது இலக்கை எளிதாக இழக்காமல் ஆடும் திறன் படைத்தவர். பந்தைச் சரியாகக் கணித்து இலாவகமாக சரியான திசையில் (Good placing) துடுப்பாடக் கூடிய ஒரே வீரர். அதனால்தான் மற்றைய வீரர்களால் ஆட முடியாத சில திறமையான அடிகளை (Shots) அநாயசமாக விளாசுகிறார். அதனாலேயே பிரெட்மனுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுகிறார் என டெண்டுல்காருக்கு புகழ் மாலை சூட்டினார் ஹரீம். (த-55)

# டேமியன் இன்று விளையாடமாட்டார்

அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட் வீரர் டேமியன் மார்ட்டின் இன்று விளையாட மாட்டார்

கடந்த சனிக்கிழமை கென்யாவுடன் நடந்த போட்டியில் அவரது வலது சுட்டி விரலில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியில் இருந்து ஷோன் வோன் வேகப் பந்து வீச்சாளர் கிலெஸ்பி ஆகியோர் அணியில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(த-5)





இவர்களின் மகிழ்ச்சி நீடிக்குமா!

CRICKET WORLD CUP 2003

# விலகுங்கள் இல்லையேல் விலக்குவோம்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியிலிருந்து சில சிரேஷ்ட வீரர்கள் தாமாக முன்வந்து விலகுவது நல்லது இல்லையேல் அவர்கள் விலக்கப் படுவார்கள் என பாகிஸ்தான் கிரிக்கெற் சபைத் தலைவர் தாகிர் ஜியா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்; இளம் வீரர்கள் அடங்கிய அணியொன்று தேர்வு செய்யப் பட்டுள்ளது. ஆயினும் அதைப் பற்றிய விபரங்களை இப்போது வெளியிட முடியாது. ஒரு சில வீரர்கள் அணியிலேயே காலத்தை ஓட்டிய வண்ணம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளனர். அவர்கள் எதிர்காலத்தில் அணியில் சேர்க்கப்படமாட்டார்கள். உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் தோல்விக்குப் பின்னர் தான் பதவி விலக எண்ணியிருந்தேன். ஆயினும் மீண்டும் அணியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்திச் செல்லவேண்டும் என்பதாலேயே அவ்வாறு செய்ய வில்லை.

உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சஹீட் அப்ரிடிக்கு பதிலாக சுழல் பந்து வீச்சாளர் சக்லைன் முஷ்டாக்கை சேர்க்காதது மாபெரும் தவறு. இதனால் இனிமேல் அணித் தேர்வில் எனது தலையீடு இருக்கும். அணிக்கு வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை எனவும் தாகிர் ஜியா கூறினார்.

இதேவேளை கிரிக்கெற் சபைத் தலைவராக முன்னாள் அணித்தலைவர் இம்ரான் கானை நியமிக்க வேண்டுமென முன்னாள் பாகிஸ்தான் வீரர் சலீமாலிக் கூறியுள்ளார். (த-55)

### அரையிறுதிப் போட்டி அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| மார்ச் 18 | அவுஸ்திரேலியா VS இலங்கை | போர்ட் எலிசெபத் | 2.00PM |
| மார்ச் 20 | இந்தியா VS கென்யா | டர்பன் | 7.00PM |

## சிறுவிளம்பரம்

### இசைக் குறிப்புக்கள்

ஓர்கன், வயலின், புல்லாங்குழல், கிற்றார், வீணை, மெலோடிக்கா போன்ற ''இசைக்கருவிகளில்'' சினிமாப் பாடல்களை இசைக்கக் கூடிவாறு ''இசைக் குறிப்புக்கள்'' என்னும் புத்தகம் (பாகம் 1) வெளி வருகின்றது. S.S.றஜீந்திரன், 75, கோவில் வீதி, நல்லூர். (கைலாச பிள்ளையார் கோவிலிலிருந்து 300m தெற்கே) (6816)

### பழுது பார்த்தல்

சகலவிதமான குளிர்சாதனங் கள், மின் மோட்டர்கள், சகல இயந் திரங்கள், ஜெனரேட்டர்கள், நீர்ப் பம்புகள் மற்றும் மின்சாரப் பொருட் கள் சிறந்த முறையில் பழுது பார்த்து தர நாடவேண்டிய இடம். 159A கோவில் வீதி, நல்லூர். (6823)

### ஸ்ரீராகவேந்த்ர ஜோதிடம்

வெளிநாடு, உள்நாடு ஆண், பெண் குறிப்புக்கள் உள்ளன. மற்றும் நாமே சரியான முறையில் பொருத்தம் பார்த்தும், திருமண தடைகளுக்கும் மற்றும் வியாபார ஸ்தலங்கள் விருத்திக்கும் வழிமுறைகள் அறிய நாடவேண்டிய இடம், ஸ்ரீராகவேந்த்ர ஜோதிடம், 159A, கோவில் வீதி, நல்லூர். (6823)

# எமது உயிரைக் கொடுத்தேனும் சமாதானத்தைக் கட்டிக் காப்போம்

## தலைவரின் பணிப்பு இது என்கிறார் பாப்பா

(தென்மராட்சி)


சமாதானத்துக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கும் படி எமது தலைவர் பிரபாகரன் எமக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். எனவே சமாதானம் ஏற்பட நாம் அர்ப்பணிப்புடன் செயல்பட உறுதி பூண்டுள்ளோம் என தமிழீழ விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.

மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை யில் நேற்று முன்தினம் மாலை சமாதான நீதிவான் சி.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற மட்டு வில் மத்தி கிராம சேவையாளர் க.வாமதேவனின் சேவை நலன் பாராட்டு விழாவிலேயே பாப்பா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாப்பா அங்கு தொடர்ந்து உரை யாற்றும் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் சமபலத்தில் இருப்பதால் தான் அரசாங்கம் எம்மைப் பேச்சுவார்த் தைக்கு அழைத்தது. நாம் இப்பேச்சு வார்த்தை மூலம் நிரந்தர சமாதா னத்தை எட்டுவதற்காகப் பாடுபட்டு வருகின்றோம்.

இருப்பினும் நாட்டில் போர் வேண்டுமா அல்லது சமாதானம் வேண்டுமா என்பதை அரசாங்கமே தீர்மானிக்கவேண்டும். சமாதான நடவடிக்கைகளில் இருந்து நாம் எக்கட்டத்திலும் விலகிவிட மாட்டோம். இது விடயத்தில் எமது தலைவர் மிகவும் பற்றுறுதியுடன் இருக்கிறார். எமது இனத்தின் எதிர்கால பிரஜை களாகிய இன்றைய சிறுவர்களின் நிம்மதியான வாழ்வுக்காக நாம் தியாக உணர்வுடன் செயல்பட்டு வருகின்றோம்.

மக்கள் பணிசெய்து மக்களிடம் பாராட்டுப் பெறுவது என்பது மிகவும் கஷ்டமான பணியாகும். இருந்த போதிலும் கூட கடந்த 13 வருடங்களாக மட்டுவில் மத்தி கிராமத்தில் நல்ல ஆக்கபூர்வமான பணி செய்த கிராம சேவையாளர் அனைத்து வழிகளிலும் பாராட்டி ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.



இது விடயத்தில் இக்கிராம மக்கள் மத்தியில் ஏற்பட்ட மனமாற்றம் வரவேற்கப்படவேண்டியதொன்றாகும் என்று குறிப்பிட்டார். (உ-77)

## கல்வி அபிவிருத்திச்சபை

(வவுனியா)

வவுனியா மாவட்ட கல்வி நிலையை முன்னேற்றும் நோக்குடன், அம்மாவட் டத்தில் கல்வி அபிவிருத்திச் சபை நேற்று முன்தினம் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டுள்ளது.

இச்சபையின் தலைவராக வவு னியா வளாகத்தின் புவியியல் துறைப் பேராசிரியர் எஸ்.நந்த குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எந்தவித அரசியல் கலப்பற்ற இந்தச் சபை மாவட்டத்தின் எதிர் கால கல்வி அபிவிருத்தியை நோக்க மாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. (உ-8)

## இல்ல விளையாட்டுப் போட்டி

(திருநெல்வேலி)

செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல விளை யாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அதிபர் எஸ்.ஜேந் திரன் தலைமையில் இடம்பெற வுள்ளது. (க-43)

# அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(கொழும்பு)

ஈராக்கிற்கெதிரான அமெரிக்க தாக்குதல்களை எதிர்க்குமுகமாக நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டமொன்றை மேல் மாகாண ஆளுநரும், பொ.ஐ.மு.வின சிரேஷ்ட தலைவருமாகிய அலவி மௌலானா ஏற்பாடு செய்துள் ளார்.

ஈராக்கிற்கெதிராக அமெரிக்கா வினால் திணிக்கப்படும் யுத்தத் திற்கெதிராக ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை தயாரித்து செயற்படுத்து வதே இதன் நோக்கமாகும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நகர மண்டபத்திற்கு அருகாமையிலி ருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெறவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# குவைத்திலுள்ள இலங்கையரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்

(கொழும்பு)

ஈராக்கில் யுத்தம் மூண்டால் தற்போது குவைத்தில் பணி புரிந்து வரும் இலங்கையர்களை பாதுகாத்துக் கொள்வதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளதாக குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் ஏ.ஆர்.எம். மன்சூர் தெரிவித்துள்ளார்.

குவைத்தில் ஏறத்தாழ ஒன் றரை லட்சம் இலங்கையர் பணி புரிகிறார்கள். குவைத் அரசாங்கம் தனது நாட்டு மக்களையும், ஏனைய நாட்டு மக்களையும் பாதுகாத்துக் கொள்ளும் அனைத்து முயற்சி களையும் மேற்கொண்டுள்ளது.

இதனால் மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங் கையர் குறித்து அவர்களது உறவி னர்கள் கவலைப்படத் தேவை யில்லை எனவும் மன்சூர் தெரிவித் துள்ளார். (உ-8)

## கசிப்பு விற்றவர்கள்கைது

(யாழ்ப்பாணம்)

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவர் நேற்று முன்தினம் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராய்ப் பகுதியில் 45 போத்தல் கசிப்புடன் ஒருவரும், யாழ். மடம் வீதியில் 6 போத்தல் கசிப்புடன் ஒருவரும் கைது செய்யப் பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ளனர். (ந-4)

## புத்தூர் ஒழுங்கை திருத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு 9ம் கட்டை ஒழுங்கை பல வருடகாலமாக திருத்தப்படாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது விடயம் தொடர்பாக சம்பந் தப்பட்ட பிரதேச சபைக்கும் அறிவித் துள்ளதாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

## பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அதிபர் பி.வடிவேல் தலைமையில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-201)

## சினிமா தின நிகழ்வுகள்

(கரணவாய்)

சினிமா தினமான எதிர்வரும் சனிக்கிழமை சலன சித்திரம் யாழ். தலைமைக் காரியாலயம் பல்வேறு சினிமா தொடர்புடைய நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. (உ-29)

## இலவச திருமணப் பதிவு

(புத்தூர்)

ஜி.ரி.சற் நிறுவனமும், மக்கள் நலன் காக்கும் பிரிவும் இணைந்து மேற்கொள்ளும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அச்சுவேலி மேற்கு செல்வநாயகபுரத்தில் அண்மையில் இலவச திருமணப் பதிவு இடம் பெற்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 20 குடும்பங்களுக்கு தந்தை செல்வா சனசமூக நிலையத்திலும், உரும்பிராய் மேற்கு செல்வபுரம் உதய சூரியன் சனசமூக நிலைய பாரதி முன்பள்ளி யிலும் இவ் இலவச திருமணப் பதிவுகள் இடம்பெற்றன. (உ-69)

## அன்னை பூபதி நினைவு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழரின் உரிமை வேண்டி உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் 15 ஆவது ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் நாளை புதன்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது. (உ-10)

# கூட்டில் இருந்த சிறுத்தை குழந்தையைக் குதறியது

## தெஹிவளையில் சம்பவம்

(கொழும்பு)

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் கூட்டினுள் நின்ற சிறுத்தை கம்பிகளுக்கிடையாக ஒன்றரை வயது பெண் குழந்தையை தாக்கியதில் குழந்தை கடும் காயங் களுடன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை 2 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் தந்தையார் சிறுத் தையின் கூட்டிற்கு அருகாக பிள்ளையை வைத்திருக்க தாயார் அதனை படம் பிடிக்க ஆயத்தமானார். அவ்வேளை குழந்தை தவறுதலாக கீழே விழுந்தது. பாதுகாப்புக் கம்பிவேலியைக் கடந்து பிள்ளையை தூக்குவதற்கு முன்னரே சிறுத்தை தனது தலையை வெளியே நீட்டி குழந்தையின் தலையைக் கடித்துவிட்டது.

பார்வையாளர்கள் சிலர் பாய்ந்து சென்று குழந்தையை வெளியே எடுத்தனர். பாதிக்கப்பட்ட குழந்தை தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (உ)

# பாடசாலை மாணவருக்கு புராண படனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 23 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை சைவப் புலவர் சங்கத்தால் புராண படன போட்டி பாடசாலை மணவர்களுக்கு நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் தரம் 11 மாணவர் கள் மற்றும் தரம் 12 மாணவர்கள் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் மாணவர் களை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திற்கு வருகை தரும்படி சைவ பரிபாலன சபையின் பரீட்சை செயலாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சையில் சித்தியடைபவர் களுக்கான பரிசளிப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதே தினம் 2002 இல் சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந் தவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் காலை 9 மணிக்கு மேற்படி பாடசா லையில் இடம்பெற உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-7)

# ஏககாலத்தில் பல்வேறிடங்களிலும் ஹலோட்றெஸ்ற் நிறுவனம் கண்ணிவெடிகளை அகற்றுகிறது

(யாழ்ப்பாணம்)

ஹலோட்றெஸ்ற் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் யாழ். மாவட்டத் தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் பரவலாக ஈடுபட்டு வருகின்றது.

முகமாலை, கோப்பாய், திருநெல் வேலி, யாழ் நகரம் மற்றும் கலட்டிப் பகுதிகளில் இப்பணி ஏக காலத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, முகமாலைப் பகுதியில படையினருடன் இணைந்து ஹலோ ட்றெஸ்ற் நிறுவனம் கண்ணி வெடி களை அகற்றி வருவது குறிப்பிடத் தக்கது.

தவிரவும், கண்ணிவெடிகளை அகற்றும் பிரதேசங்களை பாதுகாப் பானவையாக உறுதிப்படுத்தும் நடவடிக் கையிலும் தாம் ஈடுபட்டு வருவதாக நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-7)

# வேலணை மேற்கில் மரநிழலில் அமர்ந்து கல்வி கற்கும் அவலம்

(ஆனைக்கோட்டை)

வேலணை மேற்கு நடராச வித்தி யாலய மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை பெரும் சிரமங்க ளுக்கு மத்தியில் தொடர்கின்றனர்.

போதிய இடவசதி, தளபாட வசதி என்பன இப்பாடசாலையில் கிடையாது.

இதனால் இங்கு கல்வியைத் தொடர்கின்ற சுமார் 200 வரை யானோர் மரங்களின் கீழ் அமர்ந்து பாடங்களைக் கற்று வருகின்றனர்.

இதேவேளை, இவர்களில் பெரும பாலானவர்கள் வன்னியில் இருந்து வந்து அண்மையில் மீளக் குடியமர்ந் தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-201)


## தரம் 08 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

கட்டுரையின் தலைப்பு : ''எனக்குச் சிறகு முளைத்தால்''

கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

முடிவுத் திகதி : 25.03.2003

## இணைக்கும் பத்திரம்

## கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------

பாடசாலை :------------------------

கற்கும் தரம் :------------------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------------

ஆசிரியர்


# உரிமை மாற்றப் பத்திரம் பெறுவதற்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் இருந்து படகுகளை கொள்வனவு செய்து, யாழ். மாவட்டத்தில் தொழில் பெறுவோரை அவ்அவ் மாவட்ட கடற்றொழில் திணைக்களங் களினூடாக விற்பனையாளர்களிடம் இருந்து உரிமை மாற்றப் பத்தி ரத்தை பெற்றிருக்க வேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களம் அறிவித்தல் விடுத் துள்ளது.

படகு உரிமையாளர்களினதும் படகுகளினதும் பாதுகாப்புக் கருதியும் கடற்படையினரின் கெடு பிடிகள் மற்றும் சோதனை நடவ டிக்கை என்பவற்றைக் கருத்தில் கொண்டும் இந்நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதுவரை உரிமைச்சீட்டுக்கள் பெறாதவர்களையும் உடனடியாக உரிமைச் சீட்டு பெறும் நடவடிக்கை களில் ஈடுபடுமாறும் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற கடற்றொழில் அமைச்சர் கலந்துரையாடலில் கோரப்பட்டுள்ளது. (உ-4)

### பாதுகாப்புச் சபையில் யு.எஸ். தீர்மானம்

# ஒருநாள் அவகாசம் நிராகரிப்பு

# 'கயிறிழுப்பு' நிலை தொடர்கிறது

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு எதிரான புதிய தீர்மானத்தை ஐ.நா. ஏற்பதற்கு ஒரு நாள் அவகாசத்தை அமெரிக்காவும், அதன் நட்புநாடுகளும் வழங்கிய சிலமணி நேரங்களில், ஈராக்கிற்கு இறுதி எச்சரிக்கை விடும் அத்தீர்மனத்தை பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி ஆகிய மூன்று நாடுகளும் நிராகரித்துள்ளன.

முக்கியமான ஆயுதக்களைவைச செய்து முடிக்க ஈராக்கிற்கும், ஆயுத ஆய்வாளர்களுக்கும் அதிக அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று அந்த நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன.

பேருக்கே வழிவகுக்கும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிறைவேற்ற விடாமல் தடை போட பிரான்ஸ் தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்துமென பிரான்ஸ அதிபர் ஜக்ஷெராக் கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினையில் முடிவெடுக்க அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் நேற்றுவரை காலக்கெடு விதித்திருந்தன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற முத்தரப்பு உச்சி மாநாட்டுக்குப் பின் பேசிய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் நேற்றைய தினம் உலகிற்கே உண்மையை விளக்கும் நாள் என்று கூறியிருந்தார்.

ஈராக் தானாக ஆயுதங்களைக் களையாது விட்டால் பலவந்தமாகக் களையப்படும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இதனிடையே நேற்றிரவு 8.30மணியளவில் ஈராக் பற்றிய பாதுகாப்புச் சபையின் இரகசிய கூட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (பி-2)

# எந்த இடத்திலும் எதிர்த்து போராட ஈராக் தயார்

### சதாம் ஹுசைன் அறிவிப்பு

(பக்தாத்)

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் உலகின் எந்த இடத்திலும் அதனை எதிர்த்து சண்டையிடுவதற்கு தமது நாடு தயாராக இருப்பதாக ஜனாதிபதி சதாம் ஹுசைன் கூறியுள்ளார்.

எதிரி போரை ஆரம்பித்தால் ஆகாயம், கடல்மற்றும் தரை ஆகிய பகுதிகளிலும் தமதுபடையினர் எதிர்த்துச் சண்டையிடுவார்கள் என்றும் அவர் கூறினார்.

உலகின் அர்த்தமற்ற நீதிபதியாக அமெரிக்காவை யார் நியமித்தது எனவும், தமது நாட்டை ஆளுவதற்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்று கேட்பதற்கு சகலருக்கும் உரிமை உண்டு எனவும் சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தொடர்ந்தும் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்காவும் பிரிட்டனும் அப்பட்டமான பொய்களை கூறிவருவது போல் வேறு எவரும் தெரிவிக்க மாட்டார்கள் என்று தாம் நம்புவதாகவும் சதாம் ஹுசைன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் போரிற்கான தயார் நிலையில் இருக்குமாறு ஈராக் படையினருக்கு அறிவித்துள்ள சதாம்ஹுசைன் 4பிரிவுகளாக தமது படையினரை வகுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, எந்த நொடிப் பொழுதிலும் போருக்கு ஈராக் தயாராக இருப்பதாகவும் இலட்சக் கணக்கான தியாகிகள் பயிற்றப் பட்டிருப்பதாகவும் ஈராக்கிய வெளி விவகார அமைச்சர் நாஜிசப்ரே தெரிவித்துள்ளார். (பி-9)

### வளைகுடா நோக்கி

# யு.எஸ். நாசகாரிகளும் நீர் மூழ்கிகளும் பயணம்

(எகிப்து)

அமெரிக்காவின் இரு நாசகாரி கப்பல்களும் அணு ஆயுத ரக 3 நீர் மூழ்கிக் கப்பல்களும் சூயஸ் கால்வாய் வழியாக வெள்ளிக் கிழமை வளைகுடா பகுதிக்குப் புறப்பட்டன.

இதை எகிப்து துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

யுஎஸ்எஸ் ஆர்லே, யுஎஸ்எஸ் டியோ ஆகியவை நாசகாரி கப்பல்கள் அதிநவீனமானவை. பாயிஸ், டலீடோ சான் ஜுவான் ஆகியவை நீர் மூழ்கிகள். இந்த கப்பல்கள் அனைத்திலும் டோமஹாக் ஏவுகணைகள் இடம் பெற்றிருக்கும். (பி)

# ஏக காலத்தில் ஈராக் மீது இருமுனை தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டம்

### காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க கப்பலும் விரைகிறது

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு அமெரிக்கா விதித்திருந்த காலக்கெடு முடிவடைந்து விட்டதால் எந்த நிமிடமும் ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா ஆரம்பிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. செங்கடல் பகுதியிலிருந்து விமானங்கள், ஏவுகணைகள் மூலமும், குவைத் முனையிலிருந்து தரைப்படை, ஹெலிகொப்டர் மற்றும் தாங்கிகள் மூலமும் தாக்குதல்களை ஏக காலத்தில் ஆரம்பிக்க அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஈராக் போரில் காயமடையும் இராணுவ வீரர்களுக்குச்சிகிச்சை அளிக்க நவீன வசதிகள் அடங்கிய போர்க்கப்பல் ஒன்றை அமெரிக்கா வளைகுடாப் பகுதிக்கு அனுப்பியுள்ளது.

ஈராக் பேரழிவை உண்டாக்கக் கூடிய அணு ஆயுதங்களை அழிக்க அமெரிக்கா விதித்திருந்த கெடு முடிவடைவதால் அமெரிக்கா, எந் நேரமும் ஈராக்கைத் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால், ஈராக் பகுதியில் பதட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்காக அமெரிக்கா வளைகுடாப்பகுதிக்கு 4லட்சம் வீரர்களை அனுப்பியுள்ளது. தவிர 9 போர்க்கப்பல்களும் அங்கு தயார் நிலையில் உள்ளது.

அவசரகால அடிப்படையில் சிகிச்சை அளிக்கக்கூடிய கப்பலில் அறுவைச்சிகிச்சை மையம், இரத்த சேமிப்பு உட்பட பல நவீன வசதிகள் உள்ளன. இருந்தாலுமை இரசாயன ஆயுதங்களால் தாக்கப்பட்டால் சமாளிப்பதும் சிரமம் என்றும் அதன் நிர்வாகி தெரிவித்தார். (பி)

# ஈராக் மீது அவசரப்பட்டு போர் தொடுக்க வேண்டாம்

### மூன்று முக்கிய நாடுகள் கோரிக்கை

(மொஸ்கோ)

ஈராக் மீது அவசரப்பட்டு போர் தொடுத்துவிட வேண்டாம் என்று அமெரிக்காவுக்கு ரஷ்யா மீண்டும் மறைமுக எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயங்கர ஆயுதங்களை அழித்துவிட ஈராக்கிற்கு அமெரிக்கா விதித்த கெடு முடிவடைந்தவுடன் ஈராக் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து கூட்டுத்தாக்குதலை நடத்துவது உறுதியாகிவிட்டது.

இந்த நிலையில் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளான ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஜெர்மன் ஆகிய 3நாடுகளும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ஈராக் பிரச்சினையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும். ஈராக்கில் உள்ள சர்வதேச ஆயுத ஒழிப்புக் குழுவினர் பணியை நிறுத்தத் தேவையில்லை. ஈராக் மீது அவசரப்பட்டுப் போர் தொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஐக்கியத்தைப் பாதுகாக்க உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும். இந்த நெருக்கடியான நிலையில் பாதுகாப்புச் சபை பிளவுபடாமல் கட்டிக்காப்பதில் நமக்கு முழுப் பொறுப்பு உண்டு.

ஈராக்கில்மேலும்ஆயுதப்பரிசோதனை செய்வது பற்றிய விபரத்தை ஐ.நா. ஆயுதக்குழுவின் தலைவர் பிலிக்ஸ் அளிப்பார். அதுபற்றி நாம எல்லோரும் விவாதிக்க வேண்டும்.

ஈராக் நெருக்கடிக்கு அரசியல் அமைதியான தீர்வுகாண ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உள்ள அனைத்து உறுப்பு நாடுகளும் ஒத்துழைப்பு கொடுக்கும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதை ரஷ்ய வெளியுறவுத் துணை அமைச்சா யூரி பெடோடோவ் இண்டர்பேக்ஸுக்குப் பேட்டி அளிக்கையில் தெரிவித்தார். (பி)

WORLD NEWS உலக தரிசனம்

# தமிழையும் ஆட்சிமொழியாக மத்திய அரசு ஏற்கவேண்டும்

### தமிழக முதல்வர் கோரிக்கை

(சென்னை)

தமிழை ஆட்சி மொழியாக மத்திய அரசு ஏற்றுக்கொண்டால் தமிழகத்தில் இந்தி மொழியைக் கற்றுக்கொடுக்க தமது அரசு முயலும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

நாகர் கோவிலில் நலப் பணிகளை தொடக்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதே கூட்டத்தில் உரையாற்றிய மத்திய அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணன் மொழியை கற்றுக் கொள்ள மாணவர்கள் விருப்பம் வெளியிட்டுவருவதாக தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கும் ஜெயலலிதா தமிழ் மொழியை தன்னிச்சை மொழியாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்றும் இந்திய அரசியல் சட்ட அட்டவணையில் தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும் ஆட்சி மொழியாக மத்திய அரசு ஏற்றுக் கெள்ள வேண்டும என்றும் கோரிக்கை விடுத் துள்ளார்.

மலேஷியாவிலேயே தமிழ் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்தியாவில் தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப் படுவதில் தவறில்லை என்று ஜெயலலிதா சுட்டிக்காட்டியுள்ளார். (பி-9)

# அமெரிக்கா விடுத்த கெடுமுடிந்தது; எந்த நிமிடமும் போர் வெடிக்கலாம்

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு அமெரிக்கா விதித்த கெடு நேற்றுடன் முடிவடைந்ததால் வளைகுடாப் பகுதியில் போர் பதட்டம் ஏற்பட்டுள்ளது. ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் பேரழிவை உண்டாக்கக்கூடிய அணு ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

மேலும் பேரழிவை உண்டாக்கக் கூடிய அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும் அல்லது ஒப்படைக்க வேண்டும் என்றும் அமெரிக்கா கூறி வருகிறது. ஆனால் ஈராக் இதனை மறுத்து வருகிறது.

போர் பதற்றம் ஏற்பட்டுள்ள வளைகுடாவின் இன்றைய நிலைமைக்கான பின்னணி வருமாறு:

ஐ.நா. பாதுகாப்புச்சபை சார்பில், ஈராக்கில் அணு ஆயுதங்கள் உள்ளனவா? என்பதைக் கண்டறிய ஒரு சோதனைக்குழு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தச் சோதனைக் குழு கடந்த இரண்டு மாத காலமாக ஈராக்கில் சோதனை நடத்தி வருகிறது. இதனிடையே ஒரு இடைக்கால அறிக்கை ஒன்றையும் சபையிடம்தாக்கல் செய்தது.

ஹான்ஸ்பிளிக்ஸ் தலைமையிலான இந்தக குழுவின் சோதனைகள், ஈராக்கின் பல்வேறு பகுதியிலும் தொடர்ந்து நடந்து வருகிறது. முன்னதாக முதலில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் ஈராக்கிடம் அணு ஆயுதங்கள இருப்பதற்கான சான்றுகள எதுவும் சிக்கவில்லை.



பக்தாத்தில் நடைபெற்ற இராணுவ அதிகாரிகள் கூட்டத்தில் அதிபர் சதாம் ஹுசைன் புகை பிடித்தவாறு அதிகாரிகளின் ஆலோசனையைக் கேட்கும் காட்சி

**ஆதரவு:** ஈராக் மீது போர் தொடுப்பதற்கு இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் அமெரிக்காவிற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன. இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் அமெரிக்காவிற்குப் பக்கபலமாக போர் விமானங்கள்மற்றும் படைகளை அனுப்பியுள்ளன.

**எதிர்ப்பு:** ஆனால் ரஷ்யா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா ஆகிய நாடுகள் ஈராக்மீது போர் தொடுக்க அமெரிக்காவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

ஈராக் மீது போரைத் தவிர்க்க வேண்டும் என்று கூறி, அமெரிக்கா இங்கிலாந்து உட்பட ஐரோப்பிய நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும பெரும் பேரணிகளும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

முன்னதாக அமெரிக்கா ஈராக் மீதுபோர் தொடுக்க, ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ஒரு தீர்மானத்தைத் தாக்கல் செய்தது. ஆனால் இதற்கு ஆதரவு கிடைக்காததால் இது தோல்வியடைந்தது.

பின்னர் சமீபத்தில் இரண்டாவது தீர்மானம் ஒன்றை அமெரிக்கா தாக்கல் செய்தது. இதற்கு இங்கிலாந்து மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் உதவி செய்தன.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கேட்டு அமெரிக்கா சில நாடுகளை அணுகி வருகிறது. ஆனால் இதற்குப் போதிய ஆதரவு கிடைக்காததால், தீர்மானத்தை வாபஸ் பெற்று விடவும் அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.

**கெடுவிதிப்பு:** இதற்கிடையே அமெரிக்கா பேரழிவு ஆயுதங்களை ஈராக் அழிப்பதற்கு 17ந் திகதிவரை கெடு விதித்திருந்தது. அப்படி அழிக்காவிட்டால் ஐ.நா.ஆதரவு கிடைக்காத போதிலும் ஈராக் மீது போர் தொடுப்போம் என்று கூறியிருந்தது.

வளைகுடாப் பகுதியில் அமெரிக்கா தனது படைகளைக் குவித்து வருகிறது. முன்னதாக 3லட்சம் வீரர்கள்இருந்தனர். தற்போது அது 4லட்சமாக அதிகரிக்கப்பட்டது.

இங்கிலாந்துசார்பில் 50ஆயிரம் வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். வளைகுடாப் பகுதியில் 6அமெரிக்க போர்க் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (பி)

### சிறைச்சாலையில் நீதிபதி சுட்டுக் கொலை

(பிரஸிலியா)

பிரேஸில் நாட்டில் அதிதீவிர குற்றவாளிகளை தடுத்து வைத்திருக்கும் சிறைச்சாலை ஒன்றில் மேற்பார்வை செய்யும் நீதிபதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திட்டவட்டக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த புதிய நடைமுறைகளை பிரேஸில் அரசாங்கம் அறிவித்த சிலமணிநேரங்களில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரேஸிலின் புதிய அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தொடர்ச்சியாக வன்முறையில் ஈடுபட்டுவந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு மிகவும் பிரபலமான போதை மருந்து கடத்தல் காரரான லெட் ஹொமான் இந்த கொலையைச் செய்திருக்கலாம் என பி.பி. ஸி செய்தியாளர் கூறுகின்றார். (பி-9)

# புலிகளின் கப்பல் தாக்கியழிப்பு சம்பவம்

# அடக்கியாளல் தந்திர வெளிப்பாடு

## தென்மராட்சி மக்கள் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

முன்னேற்றமடைந்து வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பி, மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்கி அவர்களை அடக்கியாள எத்தனித்து வரும் ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படையின் மிக மோசமான நடவடிக்கையே அண்மையில் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவமாகும். கடற்படையின் இந்தச் செயற்பாடானது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் மட்டுமல்ல, சர்வதேச சட்டங்களையே கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகவும் அமைநதுள்ளது.

தென்மராட்சி மக்கள் அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு ஓராண்டு கடந்துவிட்டது என்றாலும், இந்த ஓராண்டுக காலத்தில் பெறுமையிலும் பொறுமையாய் இருந்து வரும் புலிகளைச் சீண்டிச் சீற்றங் கொள்ளச் செய்து யுத்தத்தை தொடங்குவதற்கு எத்தனை முனைப்புகளை ஸ்ரீலங்கா படைகள் மேற்கொண்டுள்ளன?

தீவகப் பொறுப்பாளரைத் தாக்கியமை, மானிப்பாயில் பெண்புலிகளைத் தாக்கியமை, நெடுந்தீவில் மூன்று போராளிகளின் வீரச்சாவை ஏற்படுத்தியமை, முகமாலை மற்றும் ஓமந்தை ஊடாகப் பயணஞ் செய்யும் போராளிகளை வேண்டுமென்றே இம்சைப்படுத்துவது என புலிகள் மீதான அடாவடித்தனங்கள் ஒரு புறமும், மறுபுறம் காஞ்சிரங்குடா, திருகோணமலை, வடமராட்சி, மானிப்பாய் எனப் பொதுமக்கள் மீதான அட்டூழியங்களும் நடந்தேறியுள்ளன.

இத்தனை ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியிலும் புலிகள் தம்மக்களின் சமாதான வாழ்வு, இயல்பு நிலை என்பவற்றுக்காகத் தம்மால் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டை மதித்து தொடர்ந்தும் அமைதி காத்து வரும் நிலையில், சர்வதேச கடற்பரபபில் பயணித்த புலிகளின் வர்த்தகக கப்பலைத் தாக்கி பதினொரு போராளிகளுடன் அழித்த செயலானது மிகப பெரிய யுத்தநிறுத்த மீறலாக அமைநதுள்ளது.

சர்வதேசக் கடற்பரப்பில் பயணஞ் செய்த வர்த்தகக் கப்பலைத் தாக்கி அழித்துவிட்டு ஆயுதக் கப்பல் என்றும், கொடியில்லை என்றும், தம்மை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும், ஆள்புல இறைமை, யுத்த நிறுத்த மீறல் என்றும் எத்தனை கதையளப்புக்கள் இடம்பெறுகின்றன. யுத்த நிறுத்த மீறல் என கடற்படை கருதியிருந்தால் அதனை யுத்த நிறுத்தக்கண் காணிப்புக் குழுவுக்கு அறிவித்து அவர்களின் மூலம் இப்பிரச்சினையை தீர்த்து ஸ்ரீலங்கா அரசு செய்த உடன்படிக் கையை மதித்து செயறபட்டிருக்க வேண்டும்.

கரையோரக் காவற்படை சர்வதேசக் கடற்பரப்புக்குச் சென்றமை, அங்கு வர்த்தகக் கப்பலைத் தடுத்தமை, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், புலிகளுக்கும், பாதுகாப்புச் செயலருக்கும் இடையில் பேச்சுக்கள நடந்துகொணடிருநதவேளை கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமையும் திட்டமிட்டு வேண்டுமென்றே மேற்கொள்ளபபட்ட அப்பட்டமான ஆத்திரமூட்டும செயல் என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

அத்துடன், இச்சம்பவத்தின் பின்னணியில் யுத்த முனைப்புக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு அதிகார சக்திகளின் கரங்கள் எவ்வாறு செயற்பட்டுள்ளன என்பதையும் மக்கள் நன்கு அறிவர்.

உடன்பாட்டை மீறி யுத்தத்தை தோற்றுவிப்பதற்கான ஸ்ரீலங்கா படைகளின் இத்தகைய செயற்பாடுகளை தென்மராட்சி மக்களின் சார்பில் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் மக்களின் நலன் பேணும் புலிகளின் பொறுமையையும் நாம் பெரிதும் வரவேற்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## துடுப்பாட்டப் போர்

(மண்கும்பான்)

யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மற்றும் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு இடையிலான துடுப்பாட்டப் போர் எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டி கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் இவ்விரு அணிகளிடையேயும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (உ-55)

## பொன் அணிகளின் போர்

(மண்கும்பான்)

"பொன் அணிகளின் போர்" என வர்ணிக்கப்படும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கிடையில் ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பொன்னணிகளின் போரில் பங்குபற்றிய அதே வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். கடந்த வெள்ளி, சனி தினங்களில் இடம்பெற்ற பொன்னணிகளின் போரில் சென். பற்றிக்ஸ் அணி 8 இலக்குகளால் வெற்றியீட்டியமை தெரிந்ததே. (உ-55)

## அழகெழல் போட்டிகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அழகியல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியயற்கல்லூரியில்நடாத்தபடுகின்ற சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் போன்ற துறைகளுக்கான 'அழகெழல் போட்டிகள்' குறிப்பிட்ட அதே தினங்களில் நடைபெறவுள்ளன.

இதன் பிரகாரம் நாளை காலை 9.00 மணி தொடக்கம் சித்திரம், நாடகம் ஆகிய போட்டிகளும், நாளை மறுநாள் காலை 9.00 மணி தொடக்கம் சங்கீதம், நடனம் ஆகியவற்றிற்கான போட்டிகளும் நடைபெறவுள்ளன. (உ)

## படகுகளைப் பதிவு செய்க!

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் இருந்து குடாநாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு கடற்றொழிலில் ஈடுபடுத்தப்படும் பதிவு செய்யப்படாத படகுகளின் விபரத்தை உரிய ஆவணங்களுடன் வந்து உடனடியாகப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கடற்றொழில் உயிரியல் நீர்வளத்துறைத் திணைக்களத்தில் இப்பதிவு இடம்பெறவுள்ளது. (உ-7)

## மட்டக்களப்பு

# உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு 97 இலட்ச ரூபா நிதி ஒதுக்கு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணசபை மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் திணைக் களத்திற்கு மூலதனப் பிரமாண அடிப்படையில் 55 இலட்சம ரூபாவும், மாகாண அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் 42 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டின் மூலம் மாவட்டத்தின் சகல பிரதேசசபைகளுக்கும் தலா 5 இலட்சம் ரூபா பெற்றுக் கொள்ளும்,

அத்துடன், 21 மின்சார அபிவிருத்தித்திட்டங்களும், 39 வீதி அபிவிருத்தித் திட்டங்களும்முன்னெடுக்கப்படவுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள கோரதீவு மற்றும் பிரதேச சபைக்கு 14 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், வாகரைப் பிரதேசசபைக்கு 13 இலடசத்து 70 ஆயிரம் ரூபாவும், வவுணதீவு பிரதேசசபைக்கு 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், பட்டிப்பளை பிரதேச சபைக்கு 14இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணை யாளா எம் தயாபரன்தெரிவித்துள்ளார். (க-8)

## இளைய தலைமுறை

# கலாசார சீரழிவுப் பாதையில் பயணம் செய்ய முற்படுகிறது

## கல்வி அமைச்சர் கவலை

(கொழும்பு)

இளைஞர்களின் வெற்றிகளை சமூகம் பாராட்டாமல் விடுவதாலேயே அவர்கள் தவறான பாதைக்குத் திரும்புகின்றார்கள் என கல்வி, கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கவலை தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளிற்கிடையிலான நாடகவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் அமைச்சர் உரையாற்றுகையில்,

நாட்டின் இளைய தலைமுறை கலாசார பின்னடைவுப் பாதையில் பயணஞ்செய்ய முறபடுகின்றது.

இந்நிலை மாறவேண்டுமானால் கல்வித்துறையில் மக்கள் கொண்டிருக்கும் இத்தகைய அச்சம் தீர்க்கப்படவேண்டும்.

மூத்த தலைமுறையினர் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

அதேவேளை, நாட்டில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து வரும் இளைய தலைமுறையினரை சமூகம் பாராட்டி அவர்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிக்கவேண்டும். இது சமூகத்தில் அவர்களை நல்லதொரு பிரஜையாக்குவதற்கு வழிவகுக்கும் என்றும் கூறினார். (உ-10)

## கால்நடை மேம்பாட்டு கருத்திட்டம்

(கொழும்பு)

நாட்டில் மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு மேம்பாட்டிற்கான விசேட கருத்திட்டம் ஒன்று சமுர்த்தி அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியுதவியை சமுர்த்தி வங்கியே வழங்கும் என சமுர்த்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் சாதுருக்கா சுமனசேன தெரிவித்துள்ளார். (உ-10)

# வடக்கின் மாபெரும் போர் இன்று மத்திய கல்லூரியில் ஆரம்பம்

(மண்கும்பான்)

"வடக்கின் மாபெரும் போர்" என வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் இவ்வருடம் முதல்தடவையாக 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டம் இவ்விரு அணிகளிடையேயும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

மேற்படி போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றப் போட்டிக்கான ஏற்பாடுகளை சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் மற்றும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் கே. இராசதுரை ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர்.

கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் இடம்பெற்ற போட்டிகளில் பங்கேற்ற அதே வீரர்களே இதில் பங்கேற்கவிருப்பதாக போட்டி ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

முதல் முதலாக இடம்பெறவுள்ள மடடுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டியை ரசிகர்கள் ஆவலாக எதிர்பார்க்கின்றனர். ஆண்டு தோறும் இரு நாட்கள் நடைபெறும் வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம் இனி வரும் காலங்களில் 3 நாட்களாக அதிகரிக்கப்பட இருப்பதாகவும் கல்லூரி அதிபர்கள் அறிவித்துள்ளனர். (உ-55)

## புத்தளத்தில் ஏற்பட்டுள்ள

# கலவரத்துக்கும் துப்பாக்கிகள் மீட்புக்கும் தொடர்புண்டாம்

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் கலவரம் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கும், புத்தளம் முன்னாள் நகரசபைத் தலைவர் வீட்டில் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்ட இராணுவச் சீருடை மற்றும் துப்பாக்கிகளுக்கும் தொடர்புண்டு என புத்தளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வி. ஹிந்துன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பாலாவிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் எம். நிஜாம் (வயது 22) என்பவர் பொலிஸாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே மேற்படி இராணுவச் சீருடைகளும், துப்பாக்கிகளும் முன்னாள் நகரசபைத் தலைவர் வீட்டில் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, புத்தளம் தப்போவ என்னும் இடத்திலுள்ள கருவலகஸ் வெவ என்னும் கிராமத்தில் இரண்டு கைகளும் பின்னால் கட்டப்பட்ட நிலையில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை இளைஞர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இச்சம்பங்கள் குறித்த புலன் விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## முத்திரை ஒட்டாமலேயே

# கைமாற்றல் பதிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணசபை நிர்வாகத்துக்கு உட்பட்ட சொத்துக்களை மாற்றும் நடவடிக்கையின் போது, முத்திரை வரிச் சட்ட இல 43 மற்றும் 1989ம் ஆண்டு மாகாண சபைச் சட்ட இல 12 ஆகியவற்றின்படி முத்திரை வரி அறவிடப்படு கிறது.

இருப்பினும், இறைவரித் திணைக்கள ஆணையாளர், நிதிச்சட்டம் 11 இன்படி 2002.05.01ஆம் திகதி தொடக்கம் முத்திரை வரி இல்லாது ஒழிக்கப்பட்டபடியால், மத்திய அரசின் கீழ் மேற்படி மாற்றங்கள் செய்யும் பொழுது முத்திரை வரி அறவிட சட்ட அடிப்படை இல்லையென, 17-10-2002ந் திகதி எஸ்டீ/என்ஈ/01 இலக்க கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வடக்கு கிழக்கு மாகாண சபை தனது நிர்வாக எல்லைக்குட்பட்ட சொத்துக்களின் கைமாற்றத்தின் போது, முத்திரை வரி சம்பந்தமாக என்னநடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என அறிவிக்கும் வரை, மத்திய அரசால் முத்திரிரை ஒட்டவில்லை என்ற காரணத்தால அந்த கைமாற்றல்களை பதிவு செய்ய மறுக்காமல் ஏற்றுக் கொண்டு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கும படி பதிவாளர் திணைக்களம் கேட்டுள்ளது. (உ)

## கப்பல் தாக்கப்பட்டதை எதிர்த்து

# வழக்குத் தாக்கல் செய்ய சட்டத்தில் இடமுண்டாம்

(கொழும்பு)

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்டமை தொடர்பாக விடுதலைப்புலிகள் வழக்குத் தொடரமுடியும் என ஐ.நா. முன்னாள் ஆலோசகரும் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் துறைமுகத்தில் ஐ.நாவுக்கான சட்ட ஆலோசகராகப் பணியாற்றியவருமான இ.நடராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை உயர் நீதிமன்றத்திலோ அல்லது லண்டனில் உள்ள சர்வதேச கடற்பிராந்திய ஆணைக் குழுவிலோ அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலோ இவ் வழக்கைத் தொடர முடியும் எனத் தெரிவித்துள்ள இ. நடராஜா,

சர்வதேச கடற்சட்டத்திற்கு அமைவாக ஒரு நாட்டிற்குரிய கடற்பரப்பு 12 மைலாகும். அந்த வகையில் புலிகளின் கப்பல் 125 மைல்களுக்கு அப்பால் தாக்கப்பட்டதாக இலங்கை கடற்படையே ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த அடிப்படையில் நோக்கும போது கடற்படையினர் சர்வதேச கடற்சட்டத்தை மீறியிருக்கின்றனர்.

ஐ.நா. சபையில் கடற்சடடத்தைப் பேணுவதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அது குறித்து இலங்கை உட்பட சகல நாடுகளுக்கும் ஐ.நா. சபையினால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.


இந்த அடிப்படையில் தமது கப்பல் தாக்கப்பட்டமைக்கு எதிராக புலிகள் வழக்குத் தொடர முடியும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# முஸ்லிம்களைப் புறக்கணிப்பது தமிழ் இனத்திற்குத் தலைகுனிவு

## ஜோய் மகேஸ்வரன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும்



சமாதானச் சூழ்நிலையில் சர்வதேச நாடுகள் மனிதாபிமான அடிப்படையில் வழங்கும் உதவிகள் தமிழ் மக்களுக்கு மாத்திரம் உரியவை என எவரும் தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது.

இவ்வாறு சிரான் நிர்வாக அமைப்பின் விடுதலைப்புலிகள் தரப்புப் பிரதிநிதியும், புலிகளின் பொருளாதார ஆலோசகருமான ஜோய் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பிராந்திய அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் கூட்டம் கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டபோது ஜோய் மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 20 வருட போர் நடவடிக்கைகளினால் நேரடியாக பாதிக்கப்பட்ட சகல இனத்தவர்களையும், இவ்உதவிகள் சென்றடைய வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

முன்னைய காலங்களில் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனங்களை அடக்க முற்பட்டதனாலேயே இவ்நாட்டில் பெரும் யுத்தத்தையும் பெரும் அழிவுகளையும் சந்திக்க நோர்ந்தது.

சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஆளும் அரசுகள் எந்தவித பாரபட்சமும் காட்ட இடமளிக்கக் கூடாது.

குறிப்பாக முஸ்லிம்மக்கள் தமிழ் மக்களுக்கு சகோதர இனத்தவர்களாவர். முஸ்லிம் சமூகம் கொடுமைப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்படுமனால் தமிழ் இனமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் வெட்கித்தலைகுனிய வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

இக்கூட்டத்தில் அரச திணைக்கள மற்றும் கூட்டுத்தாபனங்களின் தமிழ் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-8)

# நோர்வேயின் மத்தியஸ்தத்தில் மாற்றம் ஏதும் இல்லை

## குற்றச்சாட்டுக்களை ஹெல்கீசன் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்த போக்கில் எந்தவிதமான மாற்றம் இருக்காது.

அத்துடன, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்காக நோர்வே அரசு மிகுந்த அர்ப்பணிப்புடன தொடர்ந்தும் செயற்பட்டு வரும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன்,

நோர்வே அரசு தனது வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவே இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்துள்ளதென சில அமைப்புக்களும், நிறுவனங்களும விமர்சித்து வந்தமைக்கு மறுப்பு தெரிவிக்கும் முகமாகவே அமைச்சர் விடார்ஹெல்கீசன் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும், கருத்து வெளியிடுகையில், இலங்கை போன்றதொரு பல்வேறு நெருக்கடிகள் மிக்க நாட்டில் எமது நாடு வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் எந்தவித பயனும் இல்லை.

இது எமது நாட்டிற்கு ஆரோக்கியமானதாக அமையாது. நிரந்தர சமாதான சூழல் நிலவும் நாட்டிலேயே எந்தவொரு நாடும் தனது வர்த்தக நடவடிக்கைகளை தொடரமுடியும் எனவும் சுட்டிக் காட்டினார். (உ-10)

# கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் கல்முனையில்

(கொழும்பு)

கிழக்கு மாகாண மக்கள் நன்மை கருதி கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் அலுவலகமொன்றை கல்முனை நகரில் திறப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அணமையில் பிரதமரைச் சந்தித்த போதே பிரதமர் இதற்கான இணக்கப்பாட்டை வெளியிட்டார்.

அத்துடன், கல்முனை பிரதேசத்திற்கு சிரேஷ்ட அத்தியேட்சகர் ஒருவரை நியமிப்பதற்கும் மற்றும் திகாமடுல்ல மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்று, சம்பாந்துறை ஆகிய பிரதேசங்களும் கண்டி, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள கிண்ணியா, மடவளை பிரதேச சபைகளும் விரைவில் நகர சபைகளாக பிரகடணப்படுத்தவும் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார். (உ-10)

## சுத்திகரிப்பு தொழிலாளர் பற்றாக்குறை

# யாழ். மாநகர எல்லைக்குள் தொற்றுநோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகளை நடைமுறைப்படுத்துவதில் யாழ். மாநகரசபை பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

யாழ். மாநகரசபைப் பகுதியில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கைக்கும் இங்கு சுத்திகரிப்புப் பணியில ஈடுபடுபவர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் ஒப்பீட்டளவில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது.

குறிப்பாக ஆளணிப் பற்றாக்குறை நிரம்பவே காணப்படுவதுடன், வாகனப்பற்றாக்குறையும் பெருமளவில் நிலவுகின்றது.

இதன் காரணமாக சுத்திகரிப்பு பணிகளை ஒழுங்காக மேற்கொள்ள முடிவதில்லை.

இந்நிலை தொற்று நோய்களுக்கு வத்திடும் ஆபத்து உணரப்பட்டுள்ளது.

இதேவேளை, நிக்கொட் நிறுவனம் பெட்டிகளுடன் கூடிய 3 உழவு இயந்திரங்களை யாழ். மாநகர சபைக்கு வழங்குவதற்கு முன்வந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-4)

# இளைஞர்-யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க

## ஆசிய அபி. வங்கி நிதி

(கொழும்பு)

க.பொ. த (உ/த) பரீட்சையில சித்தியடைந்து, வேலைவாய்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக் களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டத்துக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி 100 கோடி டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

பிரதமர் ரணில விக்கிரமசிங்கவின் ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கம் தலைமையிலான குழுவினர் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்நிதி கிடைக்கவுள்ளது.

இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக கொடுக்கவும், சுய தொழில்முயற்சிகளுக்கும் இந்நிதி உதவி வழங்கப் படவுள்ளது.

இது தொடர்பான முக்கிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. (உ-8)

## களுத்துறைத் தமிழ் அரசியல் கைதிகளின்

# வழக்கை சொந்த இடங்களுக்கு மாற்ற துரிதமான நடவடிக்கை

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை அவர்களின் சொந்த இடங்களுக்கு மாற்றுவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பாக சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் கருத்து தெரிவிக்கையில், இவ்வழக்கு விசாரணைகள சம்பந்தமான திட்டமொன்றை ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களம் தயாரித் துள்ளது.

பயங்கரவாத மற்றும் அவசர காலத்தடைச்சட்டங்களின் கீழ் களுத்துறைச் சிறைச்சாலையில் தற்போது 100 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். இதனால் இவர்களது வழக்குகளை வடக்கு கிழக்கு நீதிமன்றங் களுக்கு மாற்றும்படி பல கோரிகைகள விடப்பட்டுள்ளன.

இதற்கமைய இவர்களது வழக்குகளை அப்பிரதேசங்களுக்கு மாற்றுவது தொடர்பாக ஆராயப் பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இச்சிறைச்சாலை தமிழ் அரசியல கைதிகள் கடந்த 15 நாள்களாக தங்களை விடுதலை செய்யக்கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-8)

# ஐ.தே.க. ஆதரவாளர்கள் அடிமைகளாகிவிட்டனர்

## மாயோன் முஸ்தபா கவலை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள்,மாற்றுக் கட்சிகளின் செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் பார்த்து கொட்டாவி விடுமளவிற்கு அடிமைப் பட்டவர்களாகி விட்டார்கள்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம். மாயோன் முஸ்தபா கவலை தெரிவித்துள்ளார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கடந்த 15ஆம் திகதி அமைச்சர்கள் பலர் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றிய போதே முஸ்தபா இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த மக்கள் இக்கட்சியை ஆதரிப்பதா அல்லது இந்தக்கட்சியில் இருந்து விலகி வேறு ஓர் அரசியல் கட்சியில் இணைந்து கொள்வதா என தீர்மானிக்க வேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த படியால் நாம் இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்தப்படுகிறோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர்களும் என்ன விலை கொடுத்தாவது சமாதானத்தை பெறவேண்டும் என்ற அவாவில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருகிறார்கள். இத்தகைய பேச்சுவார்த்தைகளில் எந்த விதமான முறிவுகளும் ஏற்படாத வகையில் மிக அவதானமாக செயற்பட்டுவருகிறார்கள்.

இத்தகைய நிலையில் கூட கிழக்கில் ஐக்கிய தேசிய ஆதரவாளர்களின் சுதந்திரம் நசுக்கப் படுவது நியாயமற்றது.

அத்துடன் தமிழ் முஸ்லிம் மக்கள் சமாதானம் பற்றி எங்களிடம் கேட்கும் கேள்விகளுக்குக் கூட பதில் அளிக்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே தாங்கள் மீண்டும் இந்த சிறிய கட்சிகளின் கீழ் வீழ்ந்து மடிவதா அல்லது தலை நிமிர்ந்து செயல்பட வழி காண்பதா என்பதற்கு விரைவில் முடிவு காணவேண்டும் என்றார். (உ-10)

## பெட்டியை நிரப்பும் நோக்கமுடையவர்களை

# ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ப்பதை அனுமதிக்க முடியாது

## அமைச்சர் அலிக் அலுவிகார

(கொழும்பு)

ஏழை மக்களின் வயிற்றிலடிக்க எத்தனிக்கும் எந்தவொரு அரச ஊழியர் மீதும் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன்.

இவ்வாறு கூறியுள்ளார் உள்ளூராட்சி மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார,

மாத்தளை உவலபொல்வத்த என்ற கிராமத்தில் நடமாடும் சேவையொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் அலிக் அலுவிகார இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

பொதுமக்களை ஏமாற்றி சொந்தப் பணப் பெட்டியை நிரப்பிக கொள்ளும் நோக்கமுள்ள எவரையும் ஐக்கிய தேசிய கட்சியில் சேர்த்துக் கொள்ளுவதை அனுமதிக்கத் தயாராக இல்லை.

யுத்தத்திற்காக செலவிடப்படும பணமும், அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளமும் ஏழைமக்களிடம் இருந்து வரிமூலம் பெறப் படுகின்றது.

எனவே அரசாங்கமும் விடுதலைப் புலிகளும விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து சமாதானத்தை நிலை நாட்ட முன்வரவேண்டும்.

ஏனெனில் அரசு மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையினதும் தாக்கம் மக்களையே பாதிக்கிறது.

எனவே அரசு இது விடயத்தில் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அத்துடன், சமாதானத்தைக் குழப்பி மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்க சில தீயசக்திகள் முனைந்து வருகின்றன.

மக்களும் மிகுந்த கவனமாக நடந்து கொள்ளவேண்டும். தீய சக்திகளின் பொய்ப் பிரசாரங்களிற்கு துணைபோகக்கூடாது என்று தெரிவித்துள்ளார். (உ-10)

# வெஸ்பேர்க் நாடு திரும்புவார்.

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் துாதுவர் ஜோன் வெஸ்பேர்க் தனது பதவிக்காலத்தை பூர்த்தி செய்து கொண்டு அடுத்த மாதம் 9 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

இலங்கைக்கான புதிய நோர்வேத் துாதுவர் ஹான்ஸ் பிரஸ்ரோல் கடந்த 12ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனாலும் இவர் தனது பொறுப்புக்களை அடுத்த மாதமே கையேற்கவுள்ளார். (உ-8)

# நோயாளர்க்கு இயற்கை உணவுகளே சிறந்தவை
# சமைத்த உணவுகளில் சைவ உணவு ஏற்றது

உணவுகளில் மூன்று வகையான உணவுகள் உள்ளன. 1.இயற்கை உணவுகள், 2. சமைத்த சைவ உணவுகள், 3.சமைத்த அசைவ உணவுகள், இவைகளில் இயற்கை உணவுகள் (Nature Diet) முதல் தரமானவை. மற்றவை இரண்டாம் தரமானவையே ஆகும். ஆகவே நோயாளிகள் எப்போதும் நோய்கள் தீரும் வரையில் முதல் தரமான இயற்கை உணவுகளையே தங்கள் உணவின் மொத்த அளவில் 60 வீத அளவு உட்கொள்ள வேண்டும். மீதி 40 வீத அளவு வேண்டுமானால் சமைத்த சைவ உணவுகளை உட்கொள்ளலாம். இது எல்லா நோயாளிகளுக்கும் நோய்கள் விரைவில் குணம் பெற உதவும் என்பதில் சந்தேகம் வேணடாம். எல்லாநோயாளிகளும் நோய்கள் குணமாகும் வரை எல்லா மாமிச உணவுகளையும் உண்பதைத் தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தை விரும்புபவர்கள் மாமிச உணவுகளை முற்றிலும் தவிர்த்து விட்டுத் தங்கள் உணவின் மொத்த அளவில் 40 வீதம் அளவு இயற்கை உணவும், 60வீதம் அளவு சமைத்த உணவுகளையும் பின் பற்றினாலே பெரும்பாலான நோய்களில் இருந்து விடு படலாம். மேலும் சமைத்த உணவுகளையும்,இயற்கை உணவுகளையும் ஒரே நேரத்தில் உண்பதைத் தவிர்க்கவும் இருவகை உணவுகளையும் தனித்தனியே உண்பதே நல்லது.

**நார்ச்சத்து**

. இயற்கை உணவுகளை நோயாளிகள் முடியுமானால் பழங்களாகவும், காய்களாகவும், வெஜிடபிள் சலாட், புருட்சலாட்களாகவும் உட்கொள்வதே நல்லது. காரணம்,இதில் தான் முழுமையான சக்தியை உடல் பெற முடியும். மேலும் பழங்களாகவும்,காய்களாகவும் சாப்பிடும் போது நார்ச் சத்து உடலுக்குக் கிடைக்கின்றது. நார்ச் சத்தால் மலச் சிக்கல், இதய சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள்,நீரிழிவு, வயிறு குடல் சம்பந்தமான நோய்கள், இரத்தக்குழாய் அடைப்புகள்,உணவுக் குழாய் அடைப்புகள் போன்றன தவிர்க்கப்படுகின்றன.சாறெடுத்து உட்கொள்ளும் போது அவற்றின் சக்திகளை முழுமையாகச் சாற்றில் பெறமுடியும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. மேலும் ஜுஸ்கள் விரைவில் செரிக்கப்பட்டு விரைவில் பசியைத் தூண்டும். ஆகவே பழங்களையோ, காய்கறிகளையோ மென்று சாப்பிட முடியாத நிலையில் உள்ள நோயாளிகள் மட்டும் பழச்சாறாகவோ காய்ச்சாறாகவோ உண்பது நல்லது.

**மருந்துகளுடன் இயற்கை உணவு**

பழங்கள் அல்லது காய்களைச் சாப்பிடும் போது ஏதேனும் ஒன்றிரண்டு வகைகளை மட்டும் தேவையான அளவு உண்பது நல்லது.ஒரே நேரத்தில பல வகைக் காய்களையோ, பழங்களையோ உண்பது அவ்வளவு நல்ல தல்ல.இந்த இயற்கை உணவுகளை,எமது மூலிகை மருந்துகளை உட்கொள்ளும் எல்லா நோயாளிகளும் தினம் ஒரு வேளை உட்கொள்ள வேண்டும். நோய்கள் தீவிரமாக இருக்கும் போது காலை, மாலை இயற்கை உணவுகளை சுமார்15 நாட்கள் தொடரவும்.நோயின் தீவிரம் குறைந்தவுடன் ஒரு வேளை உட்கொண்டாலே போதும். மற்ற இரண்டு நேரமும் சாதாரண சமைத்த சைவ

**மருத்துவ விளக்கம்**

உணவுகளை உட்கொள்ளலாம்.

இயற்கை உணவுகளை ஆஸ்துமா, சர்க்கரைவியாதி, இதய நோய்கள், மூட்டுவலி, அல்சர், கான்சர், எய்ட்ஸ், வயிற்றுக் கோளாறு,மலச் சிக்கல், உடற் பருமன், வாயுத்தொல்லை, இரத்தச் சோகை, சிறு நீரகக் கோளாறுகள்,ஆண்மைக்குறைவு ,இரத்த அழுத்தம்,தோல் வியாதிகள், குழந்தையில்லாத குறை, வெள்ளைபடுதல், போன்ற எல்லா நோயாளிகளும் மருந்துகளுடன் ஒரு வேளை உணவாகப் பின்பற்றுவது நல்லது.

**இயற்கை உணவுகள்**

இயற்கை உணவுகளாக பப்பாளி, தக்காளி, அன்னாசி, கொய்யா, பேரீச்சை, நாவல்மாம்பழம், சீத்தாப்பழம், ஆப்பிள்,ஒறேஞ்சு, சாத்துக்குடி,திராட்சை, வாழைபபழம், பலாப்பழம்,இலந்தப் பழம்,வேப்பம்பழம்,அத்திப்பழம்,தர்ப் பூசணி, முலாம்பழம் பழங்களையும் காயகளில்கரட், வெண்டை, வெள்ளிக் காய், நெல்லி, கோஸ்,பேரிக்காய், தேங்காய, முள்ளங்கி, வாழைத் தண்டு, சுரைக்காய், புடலங்காய் மற்றும் வெங்காயம்,கொதத மல்லித் தழை, கறிவேப்பிலை, பு,ண்டு போன்றவைகளையும்,இளநீர் பதநீர், கரும்புச் சாறு, நுங்கு போன்றவைகளில் ஏதேனும் இரண்டொரு வகைகளையும தேவையான அளவு அவ்வப்போது விரும்பிச் சாப்பிட வேண்டும். பல வற்றை ஒன்றாகக் கலந்து சாப்பிடு வது நல்லதல்ல.

**இயற்கை உணவுகளினால் ஏற்படும் நன்மைகள்**

1)எளிதில் ஜீரணமாகிறது. சக்திகள் வீணாவதில்லை. அதனால் குறைந்த அளவு உணவே போதுமானதாகி

**டாக்டர் எம். சபாபதி**

விடுகிறது. இயற்கை உணவுகள் நம்மை அடிமைப்படுத்துவதில்லை. நமது ஜீரண உறுப்புகளுக்குஅதிக வேலைப்பளு இல்லை.இதில் கழிவுகள் குறைவு. இதனால் நோய்கள் தோன்றாது.

2) இதய நோய் அபாயம் போன்றன குறையும். புற்று நோய் அபாயம் தவிர்க்கப்படலாம். எலும்புகள் மென்மையடைதல், மூட்டுவலிகள் போனறன ஏற்படுவதில்லை. ஊழைச் சதை போடாது. இரத்த சோகை ,சிறு நீரகக்கோளாறுகள் போன்ற உயிருக்கு அபாயம் ஏற்படுத்தும் நோய்கள் தவிர்க்கப்படுகின்றன.

3)இயற்கை உணவுகளை உணபவ்கள புகைத்தல், மதுவகைகள்,காப்பி,டீ போன்றவற்றைத்தவிர்த்துவிடுவார்கள்.

4)இயற்கை உணவு உண்பவர்கள் மனம் மென்மை அடைகிறது. இதனால் காமம், குரோதம், கோபம் போன்றன ஏற்படுவதில்லை. மேலும் பகை, பொறாமை, பழிவாங்கும் எண்ணம் ஏற்படாது. இதனால் மனம், உடல் இரண்டும் ஆரோக்கியமாக இருக்கும்.

5)இயற்கை உணவுகளால் சோர்வு, பலவீனம்,போன்றன நீங்கிஅறிவு ,ஞாபக சக்தி கூடும். □

## நிரந்தரக் கட்டடம்இல்லை

(வேலணை)

வேலணை பிரதேச சபைக்கென நிரந்தரக் கட்டடம் இன்மையால் பிரதேச சபையின் பணிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே இடம் பெற்று வருகின்றன.

இப்பிரதேச சபையின் அலுவல்கள் யாவும் நூல் நிலையத்தில் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-47)

## நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைப் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நாளை புதன்கிழமையும் நாளை மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரம் நாளை, பொற்பதி றோட், காளி கோவிலடியில் உள்ள நேராஜி சனசமூக நிலையத்திலும், கோவில் வீதியில் உள்ள மனோன்மணி சனசமூக நிலையத்திலும் சம்பியன் லேனில் உள்ள வளர்மதி சனசமூக நிலையத்திலும வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

நாளை மறு தினம் கொக்குவில் மேற்குப் பகுதியில் உள்ள ஆர்.டீ.எஸ். கட்டடம் மற்றும் வராகி அம்மன் கோவிலடி சனசமூக நிலையம், கலைமகள் சனசமூக நிலையம், காந்திஜி ,சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது.

இதேவேளை, இத்தினங்களில் நாய்களுக்கு உரிமத்தகடும் வழங்கப்படவுள்ளது. (உ-10)

# வரிவிதிப்பு தொடர்பான விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்

## பேச்சுக்கு புறப்படமுன் ஹக்கீம் பேட்டி

(கொழும்பு)



வடக்கு-கிழக்கு மீள் குடியேற்றம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் அவற்றில் இதுவரை சரிவர நிறைவேற்றப்படாது இருக்கின்ற அம்சங்கள் குறித்தும் ஜப்பானில் நடைபெறவுள்ள 6 ஆம் சுற்றுப் பேச்சு வார்த்தையில் பரிசீலிக்கப்படும்.

அதே சமயம் அதிகாரப் பகிர்வு சம்பந்தமான விடயங்கள் ஆராயப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதும் வரிவிதிப்புச் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கிய மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு அம்சம் மட்டும் இம் முறை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

இவ்வாறு இன்று ஜப்பானில் நடை பெறவிருக்கும் 6ஆம் சுற்றுப் பேச்சு வார்த்தையில் அரச தரப்பு பிரதிநிதியாக கலந்து கொள்வதற்காக நேற்றுக் காலை ஜப்பானிற்கு புறப்படும் முன்னர் விமான நிலையத்தில் இருந்து செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்துவெளியிடுகையில்,

இலங்கை அரசிற்கும்- தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் கடந்த ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கடல் பிராந்திய போக்குவரத்து சம்பந்தமாக சில மாற்றங்கள் செய்யப்படுவதற்கான பிரேரணைகள் முன் வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தாக்கியழிக்கப்பட்டதன் காரணமாகவே இந்த மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

அத்துடன்,அடுத்தசுற்றுப்பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்களையும் ஒரு தரப்பாக பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தரும்படி இரு தரப்பினரிடையும் கேட்கவுள்ளளோம் என்று குறிப்பிட்டார். (உ-10)

## அம்பாறை மாவட்ட

# ஆலயங்கள் புனரமைப்புக்கு அமைச்சர் மகேஸ்வரன் நிதி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த கால யுத்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களுக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது அமைச்சு நிதியிலிருந்து 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இதற்கமைய பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தலா 25ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாறைமாவட்டத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்மறறும ஆலயங்களுக்கான காசோலைகளை அமைசசர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (உ-8)



## 16 வயதுக்குட்பட்ட கிரிக்கெட்

# பாடசாலை அணிகளுக்கு பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கைப்பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் இவ்வாண்டிற்கான போட்டிகளில் பங்கேற்கும் 16 வயதுக்குட்பட்ட பிரிவு கிரிக்கெட் அணிகளையுடைய பாடசாலை அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அணித்தலைவர்கள் ஆகியோருக்கான பயிற்சிப்பட்டறை நாளை காலை 9.30 மணிக்கு வவுனியா சிங்கள மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கைப்பாடசாலை கிரிகெட் சங்கம், இலங்கை கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபையுடன் இணைந்து இப்பிற்சிப்பட்டறையை ஒழுங்கு செயதுள்ளது.

மேற்படி பயிற்சிப்பட்டறையில் யாழ்பாணப் பாடசாலைகள் பலவும பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# அமெரிக்க விரோதப் போக்கை நாட்டில் தூண்ட வேண்டாம்

## ஈராக் தூதரிடம் டிரோன் கோரிக்கை

(கொழும்பு)



அமெரிக்காவிற்கு விரோதமான போக்கைத் தூண்டவேண்டாமென இலங்கைக்கான ஈராக் நாட்டுத் தூதுவரிடம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டிரேன் பெர்ணான்டோ கேட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெற்று வரும் அமெரிக்காவிற்கான எதிர்ப்புப் போராட்டங்கள்ஈராக்கிய புலனாய்வுப் பிரிவினரின் தூண்டுதலின்பேரிலேயே நடைபெறுகிறது என அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்தே அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அண்மையில் இரண்டு ஈராக் கிய புலனாய்வுத் துறையினர் இலங்கைக்குள் நுழைந்து இத்தகைய போராட்டங்களைத் தூண்டினார்கள் என்றும் தற்போது அவர்கள் தலைமறைவாகியுள்ளார்கள் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன

எனவே இத்தகைய செயல்களில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன் அமெரிக்காவிற் கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்று அவர் ஈராக் தூதுவரைக் கேட்டுள்ளார். (உ-10)

## வருடாந்த மாநாடு

(கொழும்பு)

ரெலோ அமைப்பின் வருடாநத மாநாடு எதிர்வரும்29,30ஆம் திகதிகளில் மன்னாரில் இடம்பெறவுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் முதல்வருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். (உ-10)

## நெடுந்தீவு பி.ச. அலுவலகத்தில்

# நிலை கொண்டிருந்த கடற்படை வெளியேறியது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபைக் கட்டடத்தில் நிலை கொண்டிருந்த கடற்படையினர் அவ் விடத்தை விட்டு அகன்றுள்ளனர்.

இதனையடுத்து, மேற்படி பிரதேச சபையின் திறப்பு கடற் படையினரால் பிரதேச சபைச் செயலாளர் எஸ். தில்லைநாதனிடம் நேற்றையதினம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி பகுதியில் ஈ.பி.டி.பி. யினருக்கெதிராக இடம்பெற்ற தொடர் வெகுஜனப் போராட்டத்தையடுத்து அப்பகுதியின் பாதுகாப்புக் கருதி அங்கு மேலதிக கடற்படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெளியேறிய படையினர் அருகில் உள்ள பழைய ஆஸ்பத்திரி கடற்படை முகாமுடன் இணைந்துள்ளனர். (உ-48)

## இன்று ஒரு தகவல்

# இயல்பு மாறலாமா?

ஒரு ஆள் இருந்தார். விலங்குகள் மேல் அவருக்கு அபாரப் பிரியம். அதனால் தன் வீட்டில் ஒரு நாயை வளர்த்தார். அதேமாதிரி கழுதையையும் வளர்த்தார். அந்தக் கழுதை அவரின் வீட்டுக் கொல்லைப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கும். ஏதாவது பொதிசுமக்கும் வேலை இருந்தால் அதைக் கவனித்துக் கொள்ளும். அந்த நாய் வீட்டினுள்ளே இருக்கும். நாய்க்கு அந்த வீட்டில் இராஜஉபசாரந்தான். அதற்கு அந்த வீட்டில் ஏகப்பட்ட மரியாதை. குளிப்பதற்குச் சோப்பு, இரண்டு வேளையும் பால், பிஸ்கட், மத்தியானம் சாப்பாடு. அதற்கு ஏதாவது உடம்பு சரியில்லையென்றால் உடனடியாக ஆஸ்பத்திர வைத்தியம். மிகவும் கொடுத்து வைத்த நாய்.

அந்த வீட்டுத் தலைவர் வெளியில் ''வாக்கிங்'' போனால் கூடவே இதுவும் போகும். அவர் மட்டும் தனியாக எங்காவது வெளியே போய்வீட்டு வந்தால், வீட்டுக்கு வந்த உடனே அந்த நாய் அவரிடம் ஓடிவரும. அப்படியே எழும்பி முன்னங்கால் இரண்டையும் அவர் தோள்மேல் போட்டுக் கொள்ளும். அவர் சிரித்துக கொண்டே அதன் தலையில் செல்லமாகத் தட்டுவார். அவர் ஈஸிசெரில் சாய்ந்து கொண்டு டி.வி. பார்ப்பார், பத்திரிகை படிப்பார். அப்பொழுது அந்த நாய் அவருடைய காலடியில் படுத்துக்கொள்ளும். அப்பொழுதுகூட அவர் அதன் தலையைச் செல்லமாகத் தடவிக் கொடுப்பார். அந்த நாய் படுப்பதற்கென்றே ஒரு மெத்தை. சில சமயம் அது அங்கேயிருக்கும் மேஜை, நாற்காலி மேலே கூட ஏறிவிளையாடும். சோபாவில் ஏறி உட்கார்ந்து கொள்ளும். இவ்வளவு செல்வாக்காக வளர்ந்தது அந்த நாய்.

இவற்றை அந்தக் கழுதை பார்த்தது. யோசிக்க ஆரம்பித்து. ''என்ன இது... இந்த வீட்டில் நாம் கழுதையாக உழைக்கின்றோம். பொதி சுமக்கிறோம். நமக்கு ஒரு நல்ல சாப்பாடு கிடையாது. படுக்கை கிடையாது. ஒரு நாளாவது நமது முதுகையோ, தலையையோ தடவிக் கொடுத்தது கிடையாது. ஆனால் அந்த நாய் இந்த வீட்டுக்காக ஒரு துரும்பைக் கூட அசைத்தது இல்லை. அதைப் போய் இந்த வீட்டில் உள்ளவர்கள் இப்படித் தலையிலே வைத்துத் தாங்குகிறார்களே!'' என்று யோசித்தது. வெகுநேரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது.

''சரி... இனிமேல் நாமும் அந்த நாய் மாதிரியே நடந்து கொள்வோம். அது மாதிரியே Behave பண்ணுவோம். அப்போதாவது நமக்கும் அந்த மரியாதை கிடைக்கின்றதா பார்க்கலாம்'' என்று மனதில் ஒரு திட்டம் போட்டது. உடனே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவும் ஆரம்பித்தது. அதாவது அந்த வீட்டில் அந்த நாய் என்னென்ன செய்கின்றதோ அவற்றையெல்லாம் இதுவும் செய்ய ஆரம்பித்து வீட்டது. அந்த வீட்டு எஜமான் எங்கேயோ வெளியில் சுற்றிவிட்டு மிகவும் அயர்ந்து போய் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். உடனே இந்தக் கழுதை அவரடம் ஓடியது. அந்த நாய் என்ன பண்ணுமோ அது மாதிரியே பண்ணியது. அதாவது அந்த அவரின் தோள் மேல் முன்னங்கால் இரண்டையும் தூக்கிப் போட்டது. அவர் பயந்து போய்விட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இது ஏன் இப்படிப் பண்ணுகிறதென்று?

கொஞ்சம் ஒதுங்கி நின்றார். இது அவரைச் சுற்றிச்சுற்றி வந்தது. நர்ய் மாதிரி வாலை ஆட்டிக் கொண்டது. அவர் கிடுகிடு என்று வீட்டுக்குள் போனார். இதுவும் பின்னால் ஓடியது. அங்கே போய் நாய் மாதிரியே மேசை, நாற்காலி மேல் ஏறிக் குதித்து விளையடியது. சோபாவில் உட்கார்ந்தது. மேசையிலிருந்த சாமான்களெல்லாம் கீழே விழுந்து உடைந்தன. கழுதை மேசை மீது ஏறிக் குதித்தால் என்ன ஆகும்?

அவர் பார்த்தார். சரி... இந்தக் கழுதைக்கு என்ன ஆகிவிட்டது என்று யோசித்து ஒரு முடிவு பண்ணினார். ஒரு நல்ல கயிறாகப் பார்த்துக் கொண்டு வந்து அதன் காலிலும் கழுத்திலும் கட்டித் தரதரவென்றுஇழுத்துக் கொண்டு போனார். அடித்துக் கொல்லைப் பக்கத்தில் கட்டிப்போட்டு வி'ட்டார். அன்ன ஆகாரம் எதுவும் கொடுக்கவில்லை. பட்டினி போட்டுவிட்டார்.

இப்பொழுது அந்தக் கழுதை ''என்ன இது? நமது எஜமானுக்கு இன்றைக்கு என்ன ஆனது? அந்த நாய் பழகுவது மாதிரித்தானே நாமும் பழகினோம். ஆனால், இந்த மனிதன் நாயை அடிக்கவில்லை, ஆனால் நம்மை அடிக்கிறான். இப்படிக் கொண்டுவந்து கட்டிப் போட்டு விட்டானே. என்ன காரணமாயிருக்கும்?'' என்று யோசிக்க ஆரம்பித்து விட்டதாம்.

எதற்கு இந்தக் கதை என்றால். இது மாதிரிச் சில சமயம் நாம் கூட யோசிப்பது உண்டு. நமது இயல்பு மாறி நடக்க ஆரம்பித்து விட்டால். பல சமயங்களில் இப்படி யோசிப்பது போலத்தான் ஆகிவிடும். ஆதலால் ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொண்டால் தான் நமக்கு மரியாதை! வெறிநாய் கடித்துவிட்டால் மனிதனும் அது மாதிரியே ஆகிவிடுகின்றான் பார்த்தீர்களா? அவனுடைய இயல்பு மாறி விடுகிறது.

ஒருவனைப் பார்த்து இன்னொருவன ''வெறி நாய் ஒன்று உன்னைக் கடித்து விட்டால் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டானாம். ''நான் உடனே பேப்பரும், பேனாவும் கேட் பேன'' என்றானாம் அவன். '' ஏன் உயில் எழுதுவதற்கா?'' என்று கேட்டிருக்கிறான். ''இல்லை... நான்யார், யாரையெல்லாம் கடிக்க வேண்டும் என்று லிஸ்ட் தயார் பண்ணுவதற்கு என்றானாம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பொய் வாக்குறுதிகள் வழங்கியே பாராளுமன்றம் நுழைந்தேன்

### உண்மையை உரைக்கிறார் அனுரா



(கொழும்பு)

பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி எந்த அரசியல் வாதிகளும் இனிமேல் பாராளுமன்றம் செல்ல முடியாது என, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு கட்சியின் நிலைப்பாடு குறித்தும் இன்றைய அரசியல் நிலைப்பாடு குறித்தும், விளக்கும் கருத்தரங் கொன்றில் கலந்துகொண்டு பேசிய அனுரா இவ்வாறு தெரிவித் துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அனுரா தான் உட்பட அரசியல் வாதிகள் அனைவரும் பொய்வாக்குறுதி களைக் கூறியே மக்களிடம் வாக்குகளைப் பெற்றோம்.

இரண்டு கொத்து அரிசி, திறந்த பொருளாதாரக் கொள்கை, ஜனசக்தி, 3.50சதத்திற்குப் பாண் என்ற பொய் வாக்குறுதிகளை நம்பி வாக்குகளைப் பெற்ற காலம் மலையேறி விட்டது.

இவ்வாறான பொய்வாக்குறுதி களை மக்கள் இப்போது நம்புவது இல்லை. எனது தந்தையைத் தவிர டட்லிசேனநாயக்கா, எனது தாய், சகோதரி மற்றும் தான் உட்பட அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அனைவரும் பெய்யான வாக் குறுதிகளையே வழங்கினோம் இன்றும் வழங்குகின்றோம் என்று குறிப்பிட்டார்.

மேலும், மக்களுக்கு இன்றைய அரசியல் வாதிகளின் நிலை நன்கு புரிந்துவிட்டது. இதனால் வாக்குறுதி களை மக்கள் இப்போது நம்புவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

# எம்பிலிப்பிட்டிய வீதி அபிவிருத்திக்கு 200மில்லியனை நோர்வே அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நோர்வே அரசாங்கம் ஈடுபட்டமையும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் ஒரு நாணயக்குற்றியின் இருபக்கங்களாகும்.

கடந்த சனியன்று இடம்பெற்ற எம்பிலிப்பிட்டிய வீதி அபிவிருத்திக்கு 200மில்லியன் ரூபாவை அன்பளிப்புச்செய்யும் வைபவத்தில் நோர்வேப் பிரதி வெளியுறவு அமைச்சர் விடார் ஹெல்கசன் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும், ஒஸ்லோவில் நடைபெற்ற மாகாநாட்டில் இதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. யுத்தம் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. சமாதான சூழ்நிலை இல்லாமல் பொருளாதார அபிவிருத்தி சாத்தியமற்றது. சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் செயற்படுவதற்குக் கிடைத்த வாய்ப்புப் பற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இது வரை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு 30பில்லியன் ரூபாக்கள்வழங்கப்பட்டன. இதில் முக்காற் பங்கு பணம் தென் மாகாண சபைக்குட்பட்ட பகுதிகளுக்கே செலவிடப்பட்டுள்ளது. மேலும் மேலும் முதலீடுகளை கவருவதற்கு சமாதானம் தேவை.

வீதிகளின் வலயமைப்பை விருத்தி செய்வது, மக்கள் சேவைகளை எளிதில் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். உடனடி வேலை வாய்ப்புகளுக்கு வாய்ப்பளிக்கும். தென்பகுதியின் கிராமிய பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த இவைகள் அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார். (உ)

## இராசி பலன்

**18.03.2003**

(பங்குனி 4. செவ்வாய்)

| | |
|---|---|
| பூரணை | பி.ப. 5.04வரை |
| உத்தரம் | பி.ப 3.54வரை |
| இராகுகாலம் | 3.19 -4.49 |
| சுபநேரம் | 10.49-12.19 |

*பூரணைவிரதம்,பங்குனி உத்தரம்*
*அமிர்த சித்தம்*

**மேடம்**
காரியசித்தி. பிறர் உதவி, ஆரோக்கியம், புதிய முயற்சி.

**இடபம்**
குடும்பக்கவலை, சிறுவியாதி, தொழில் நன்மை, முயற்சி தமதம்.

**மிதுனம்**
மாணவர் கல்வியில் ஆர்வம்,ரோகபயம், திடீர் நன்மை, தனவிரயம்.

**கடகம்**
தடைப்பட்ட காரியம் கை கூடும், இனிய சம்பவம், கூட்டு முயற்சி, நற்கீர்த்தி.

**சிங்கம்**
நல்லகாரியம், ஜனவசியம், தொழில் லாபம், பெருமை.

**கன்னி**
புதிய வஸ்திரம், மனமகிழ்ச்சி, போசன சுகம், முயற்சி பலிதம்.

**துலாம்**
உணர்ச்சிவசப்படல், சுப செலவு, வேலைக்கஷ்டம், சோம்பல்.

**விருச்சிகம்**
காரிய நன்மை, தனலாபம், சிநேகிதர் நல்வரவு, சயன சுகம்.

**தனுசு**
அதிக பிரயாணம், பிரபுத்தனம், நன்கொடை, கௌரவமான நிலை.

**மகரம்**
புதிய சிந்தை, சரீரப்பிரயாசை, வயிற்றுவலி, நிர்ப்பந்தம்.

**கும்பம்**
பிரயாண பயம், காரியதடங்கல், உறவினர் மனஸ்தாபம், உடல் நலக்குறைவு.

**மீனம்**
களஸ்திர சுகம், காரிய சிந்தை, தனலாபம், ஸ்திரீ சௌக்கியம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# கான்சரைக் கட்டுப்படுத்த ''கோப்'' வைத்தியசாலை

(கொழும்பு)

புற்று நோயினை ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொண்டால், நோயாளியைப் புற்றுநோயில் இருந்து முழுமையாகக் காப்பாற்றுவதுடன், இதன் மூலம் இந்நோய் உடலெங்கும் பரவிவிடாது சிகிச்சை மூலம் விரைவில் கட்டுப்படுத்திவிடவும் முடியும்.

இவ்வாறு சுகாதார அமைச்சின் ஆய்வுகூட சேவைகள் பிரதிப்பணிப்பாளர் அஜித் மெண்டிஸ் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், புற்று நோய்களிற்கெதிரான தடுப்பு மருத்துவ சிகிச்சைகள் தற்போது கொழும்பு மஹரகம வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான விசேட திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை புற்றுநோயினைக் கட்டுப்படுத்துவதற்காக 'கோப்' வைத்தியசாலையினை நிறுவவுள்ளதாகவும் இதற்கு இலங்கை கிரிக்கெட் அணியினர் அனுசரணை வழங்குவதாகவும் புற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் எம்.கே ஆரிய ரட்ண தெரிவித்துள்ளார். (உ-10)

# கடமை தவறும் பொலிஸார் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை

### உள்துறை அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

கடமைகளைப்புறக்கணிக் கும் பொலிஸ உத்தியோகத்தர்கள மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக் கப்படும் என உள்துறை அமைச்சா ஜோன் அமரதுங்கா அறிவித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் கள் பலர் தமது கடமைகளைப் புறக்கணிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (உ-8)

# பிரதமரின் கைகளை தமிழ் மக்கள் பலப்படுத்த வேண்டும்

### சுகாதார அமைச்சர் ஜெயரத்தின

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைதியான சூழல் தொடர்ச்சியாக இருப்பதற்கு அங்கு வாழும் மக்கள் பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் கைகளைப்பலப்படுத்த வேண்டுமென சுகாதார அமைச்சர்ஜெயரத்தின வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.தே.கட்சியின் அமைப்பாளர்கள் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், சமாதானத்தின் மூலம் நாட்டின் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டி, மக்களின் ஆதரவுடன் பொருளாதார அபிவிருத்தியைக் கொண்டு வருவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் இதனால் சமாதானத்தைப் பேணுவதில் மக்கள் முக்கிய பங்கை வகிக்க வேண்டும் என்றார். (வ-5)

*நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்*
*அல்லற் படுப்பதூஉம் இல்*
*—குறள்—*

# வலம்புரி

## தீர்வு அவசியம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஆறாம் சுற்றுப் பேச்சுக்கள் இன்று யப்பானில் நடை பெறுகிறது. விடுதலைப் புலிகளின் வார்த்தகக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் வைத்துத் தாக்கப்பட்டதற்குப் பின்னர் நடைபெறுகின்ற முதலாவது பேச்சுவார்த்தை இதுவாகும்.இதனால் இன்று நடை பெறுகின்ற பேச்சுக்கள் கடந்த ஐந்து சுற்றுப் பேச்சுக்களை விட வித்தியாசமாக இருக்கும்.இதனை அரசதரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவிற்கு தலைமை தாங்கும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினை அதனைத் தொடர்ந்து அரசியல் தீர்வு என்ற ஒழுங்கில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவதாக இருந்த போதிலும் ஐந்து சுற்றுப் பேச்சுக்களின் அநேக சந்திப்புக்களில் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் குறித்தே ஆராயப்பட்டன.

இதனால் அடிப்படைப் பிரச்சினை குறித்தோ அல்லது அரசியல் தீர்வு குறித்தோ பெரிதாக ஆராயப்படவில்லை.எனினும், ஆறாம் சுற்றுப் பேச்சுக்கள் அரசியல் தீர்வை நோக்கியதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும்,கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் ஆறாம் சுற்றுப் பேச்சில் இடம் பிடித்துள்ளதால்,அரசியல் தீர்வு பற்றி பேச்சுக்கள் மேலும் எட்டிப்போவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இலங்கை இனப் பிரச்சினையைப் பொறுத்த வரை அதற்கான தீர்வு எட்டிச் செல்லுமாக இருந்தால் அதனால் யுத்த நிறுத்த மீறல்கள் மென்மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.இந்நிலையில்,தீர்வுத் திட்டத்தை விரைவாக எட்ட வேண்டிய பொறுப்பு பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் இருதரப்புக்கும் உண்டு.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒருவருடம் கடந்த நிலையிலும் இது வரை பிரச்சினைக்கான தீர்வு இனம் காணப்படாமை பெரும் குறைபாடாகும்.புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும்,சமாதானப் பேச்சுக்கள் நடை பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது.இப்போது பேச்சுக்கள் நடை பெறுகின்றபோதிலும்,அவை யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய ஆராய்வாக அமைகிறது.எனவே அரசும் விடுதலைப் புலிகளும் சந்திக்கின்ற சமாதானப் பேச்சுக்களை அரசியல் தீர்வுக்கான களமாகப் பயன்படுத்திக் கொண்டு,யுத்த நிறுத்த மீறல்களை ஆராயும் களத்தை இலங்கையிலேயே ஏற்படுத்திக் கொள்வது சமாதான முயற்சிக்கு ஆரோக்கியமானதாக அமையும். சமாதானப் பேச்சுக்களின் நீட்சி நாட்டின் ஆட்சி மாற்றத்திற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதோடு,அதுசமாதான முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கும் ஏதுவாகும்.

சமாதானப் பேச்சுக்களில் அரசு-புலிகள் எட்டும் தீர்வுத் திட்டத்திற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவும் தேவை என்பதால் காலத்தை வீணாக்காது விரைவாக தீர்வை எட்டுவதே புத்திசாலித் தனமாகும்.

# தமிழ்ப் பெண்போல் கோயிலில் வழிபடும் குரோஷிய பெண்

இந்திய கோயில்களின் கலை அம்சங்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் தன்னை ஈர்த்துள்ளதால் தினமும் சுசீந்திரம் கோயிலுக்கு வந்து வழிபடுவதாக குரோஷிய நாட்டு பெண் கரோலினாபிலிக் (வயது 40) கூறினார்.

குரோஷியா நாட்டை சேர்ந்த கரோலினாபிலிக் என்ற பொருளாதார நிபுணர் கடந்த 2 மாதத்திற்கு முன் இந்தியாவை சுற்றிப்பார்க்க வந்தார்.

இந்தியாவிற்கு வந்த இவர் நாட்டின் பல்வேறு சுற்றுலா மையங்களுக்குச் சென்றார். குறிப்பாகக் கோயில்களுக்கு இவர் சென்று அக்கோயில்களின் கட்டடக்கலை, அதன் வரலாற்று சிறப்புகள் ஆகியவற்றை அவர் அறிந்து குறிப்புகள் எடுத்து வருகிறார்.

இந்நிலையில் அவர் கடந்த இரண்டு மாதத்திற்கு முன் கன்னியாகுமரி வந்தார். அங்கு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கி வருகிறார். அங்கிருந்தபடியே மாவட்டத்தின் பல்வேறு சுற்றுலா மையங்களுக்கு பேருந்தில் சென்று வருகிறார்.

இச்சூழ்நிலையில் சுசீந்திரம் கோயிலுக்கு வந்த இவர் கோயில் கட்டடக் கலைகளைப் பற்றி அறிய ஆவல் கொண்டார். கோயில் வரலாற்று குறித்த ஆங்கில புத்தகத்தை வாங்கி படிக்கத் தொடங்கினார்.

கோயிலில் தரிசனம், பூஜை முறைகள் இவரை நன்கு கவர்ந்தன. இதனால் தினமும் கன்னியாகுமரியிலிருந்து பேருந்தில் சுசீந்திரம் வந்து சுவாமி தரிசனம் செய்யத் தொடங்கினார்.

மேல் நாட்டு ஆடையைத் துறந்து தமிழக பெண்கள் போல் பட்டுச் சேலை அல்லது கதர் சேலைகளை உடுத்தி கோயிலுக்கு வருகிறார். இவர் கோயிலுக்கு இத்தகைய ஆடையில் வருவதை இங்குள்ள பெண்கள் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்.

கோயிலுக்கு சென்று திரும்பும் இவர் நெற்றியில் திருநீறுடன் குங்குமமிட்டு தமிழக பெண்களைப் போல் வருகிறார். தற்போது அவர் கோவிலில் தினமும் காலை 10 மணிக்கு நடைபெறும் பூஜைகளில் பங்கேற்று வருகின்றார்.

கோயிலில் நடைபெறும் அன்னதானத் திட்டத்தில் பக்தர்கள் பங்கேற்று உணவு அருந்துவது மறக்க முடியாத நிகழ்ச்சியாகக் கருதுகின் றார் கரோலினாபிலிக்.

இந்தியக் கட்டடக் கலைக்கு முன்னோடியாக விளங்கும் சுசீந்திரம் கோயில் தன்னை ஈர்த்துள்ளது என்றும் தெய்வீக தன்மை வாய்ந்த இக்கோயிலை வழிபடுவது மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

இன்னும் ஒரு மாதத்திற்குள் ஊர் திரும்ப இருப்பதாகவும், தங்கள் நாட்டில் இந்திய கோயில்களின் கட்டடக்கலை குறித்து எடுத்துக் கூறப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# செயற்கை மூளை சோதனைக்கு வருகிறது

மனித மூளை எவ்வளவு மகத்தானது என்பது மூளை உள்ள அனைவராலும் உணரப்பட்ட விஷயம். அத்தகைய மூளையை செயற்கையாகத் தயாரிக்க முடியுமா என்ற ஆராய்ச்சி முக்கிய கட்டத்தை இப்போது எட்டியிருக்கிறது.

நினைவாற்றல் குறைவு நோய், வலிப்பு நோய், பக்கவாதம் ஆகியவற்றால் மூளையின் செயலை இழந்தவர்களுக்கு இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் நல்ல பலனை அளிக்கும். ஆனால் சிறிது காலம் காத்திருக்க வேண்டும்.

அனுபவங்களைத் தரம்பிரித்து அனுப்புவது ஹிபோகாம்பஸ் என்ற மூளையின் முன்பகுதி. பின்னர் அது மூளையின் மற்றுமொரு பகுதியில் நினைவாகத் தொகுத்து வைக்கப்படுகிறது. ஹிபோகாம்பஸ் தேய்ந்தாலோ, சேதம் அடைந்தாலோ நினைவு தப்புகிறது. இப்பகுதியில் சிலிக்கான் சிப்புகளைப் பொருத்தினால் நினைவாற்றல் மீளும்.

இப்போதைக்கு எலிகளின் மூளைகளில் சிலிக்கான் சிப்புகளை வைத்துச் சோதனை செய்வார்கள். பிறகு சோதனைச் சாலையில் உள்ள எலிகளிடமும் குரங்குகளிடமும் சோதனையைத் தொடர்வார்கள். அம்முடிவுகள் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளித்தால் மனித மூளையில் பொருத்துவார்கள்.

# போலி ஆவணங்களை அச்சிட்டு வழங்கிய நிலையம் பிடிபட்டது

(கோட்டை)

கொழும்பு தெமட்டகொட பகுதியில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள், கல்விச் சான்றிதழ்கள், கடவுச் சீட்டுக்கள், தேசிய அடையாள அட்டைகள் போன்றவற்றை சட்ட விரோதமாக அச்சிட்டு வழங்கிவந்த ஒரு மோசடி நிலையத்தை கொழும்பு குற்றவியல் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தகவல் தொடர்பு நிலையம் என்ற பெயரில் இயங்கிவந்த ஓர் இடத்திலிருந்து மேற்படி போலி ஆவணங்களை வழங்கிவந்த மேற்படி மோசடியின் பிரதான நபரைப் பொலிஸார் கைது செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர். அவ்விடத்திலிருந்து 50 றபர் முத்திரைகளையும் அவர்கள் கண்டுபிடித்துள் ளனர்.

பாடசாலை விண்ணப்பப் படிவங்களையும் இவர்கள் விநியோகித்துள்ளார்கள்.

இதில் சம்பந்தப்பட்ட ஏனையவர்களையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (பி)

## திினசரி தியானம்

### ஆத்மீக வாழ்க்கை

ஆத்மீக வாழ்க்கை என்பது வெறும் விளையாட்டுப் பேச்சல்ல. அது உண்மையில் ஆத்மாவின் நிலைத்திருப்பதேயாகும். அது இந்திரியங்களுக்கும், மனதுக்கும் எட்டாத கலப்பற்ற ஆனந்தத்தின் அனுபவமேயாகும். அது பூரணமான தேர்ச்சி பெற்ற வாழ்க்கையேயாகும்.

ஆசை, துவேசம், சுயநலம், பொறாமை ஆகியவைகளைக் களைந்தெறிந்து விட்டு உன் இதயமாகிய தோட்டத்தில் சாந்தியை நிலைநாட்டு. எங்கும் நிறைந்ததும், அறிவு மயமானதும், அழியாததுமான ஆத்மாவே நீ என்பதை உணர்வாய்.

சுவாமி சிவானந்தர்

# கண்களைக் கட்டிக்கொண்டு படம் வரையும் மாணவி



கண்களைக் கட்டிக்கொண்டு ஓவியம் வரைகிறார் ராஜபாளையத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி விஷ்ணுப்பிரபா. சோப்பு, வெண்கட்டி, களிமண், காய்கறி மற்றும் கழிவுப் பொருட்கள் போன்றவற்றைக் கொண்டும் பல உருவங்களை வடிவமைத்து வருகின்றார்.

ராஜபாளையம் கோட்டைத் தலைவாசல் தெருவைச் சேர்ந்தவர் என்.கே.சந்திரராஜா. இவரது மகள் விஷ்ணுப்பிரபா. ஏ.கே.டி.தர்மராஜா பெண்கள் கலைக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பட்டப்படிப்பு மாணவி.

சிறுவயது முதலே ஓவியம், சிற்பங்கள் செய்வது போன்றவைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு பல மாதிரிகளை உருவாக்கியுள்ளார்.

இது குறித்து விஷ்ணுப்பிரபா கூறுகையில்,

எல்.கே.ஜி.படிக்கும் போதிலிருந்தே ஓவியங்கள் வரைவதில் அதிக ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. ஓவியக்கலையை வியாபாரப் பொருளாக்குவதை விட மனத்திருப்திக்காகவும், மற்றவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்துடனும் உருவாக்கி வருகிறேன் என்றார்.

ஓவியக்கலை மூலம் ஏராளமான சான்றிதழ்கள், பதக்கங்கள், பரிசுப் பொருள்கள் பெற்றுள்ள விஷ்ணுப்பிரபா, கண்களைக் கட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டும் விநாயகர், கம்பியூட்டர் இயக்கும் விநாயகர் போன்றவற்றை வரைகிறார்.

# பெண்ணின் வ்யிற்றிலிருந்த பொருள் நவீன அறுவை மூலம் அகற்றப்பட்டது

கர்ப்பத்தடைக்காகப் பயன்படுத்தப்படும் 'காப்பர்-டி' என்ற உறை, ஒரு பெண்ணின் வயிற்றுக்குள் தற்செயலாகச் சென்றுவிட்டது. அத்துடன் இரண்டரை ஆண்டுகள் வாழ்ந்த அப்பெண்ணின் வயிற்றிலிருந்து லேப்ரோஸ்கோப்பி மூலம் அது எடுக்கப்பட்டது.

திருப்பதியில் உள்ள ரஷ் மருத்துவமனையில் டாக்டர் சி.சுப்பிரமணியம் தலைமையிலான குழுவினர் இச்சிகிச்சையை வெள்ளிக்கிழமை இரவு செய்தனர். அப்பெண்ணுக்கு வயது 25. ரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டு வந்தார். வயிற்றில் தாங்க முடியாத வலி இருப்பதாக டாக்டரிடம் அவர் தெரிவித்தார் அதன்பிறகு செய்த பரிசோதனைகளில் அவருடைய வயிற்றில் கர்ப்பத்தடை உறை இருப்பது தெரிந்தது.

லேப்ரோஸ்கோப்பி சிகிச்சையால் நேரமும் மிச்சம், நோயாளியின் உடலை அறுத்து அறுவைச் சிகிச்சை செய்யவேண்டியதும் இல்லை.

# திடீர் வீதித் தடைகள் தொடர்ந்து இடம்பெறும்

(கோட்டை)

திடீர் வீதித்தடைகளும், சோதனைகளும் தேவையான போதெல்லாம் நாடெங்கிலும் செயல்படுத்தப்படும் என்று பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா கூறியிருக்கின்றார்.

கடந்தவருடம் பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதிலிருந்து திடீர் வீதித்தடைகள் மேற்கொள்வது நடைமுறையில் இருந்து வருவதாகவும், இது தொடர்ந்தும் அமுலில் இருந்து வரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து வீதித் தடைகளும் சோதனைகளும் நாடு முழுவதும் நிறுத்தப்பட்டன. இவைகளை மீளவும் ஆரம்பிக்கும் நோக்கம் இல்லை. அவ்வாறு அரசாங்கமும் அறிவுறுத்தவில்லை என்று திரு ஆனந்தராஜா கூறியுள்ளார். (பி)

# பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் என்பது சரத் அமுனுகமவின் வாய்ச்சவடால்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஊடகப் பேச்சாளர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை என கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டி.எம்.ஜயரட்ண சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஊடகப் பேச்சாளர் ஒருவர் இல்லை என்பதை நான் பல தடவைகளில் தெரிவித்தேன்.

ஆனால் சில பதவி ஆசை கொண்டவர்கள் தாங்கள் தான் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எனக் கூறிக்கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள்.

இவ்வாறு செயல்படுபவர்கள் குறித்து கட்சியின் வரவேற்புக் குழுக் கூட்டத்தில் இதுவரை பிரஸ்தாபிக்கப்படவில்லை.

ஊடகப் பேச்சாளர் என்ற நிலையில் இந்நபர்களால் விடுக்கப்படும் எந்தவொரு அறிக்கையினையும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அறிக்கையாகக் கருதக் கூடாது.

பொதுச் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்படும் அறிக்கைகளையே முன்னணியின் உத்தியோக பூர்வ அறிக்கைகளாக கொள்ள முடியும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின ஊடகப் பேச்சாளர் என்ற போர்வையில் சட்டவிரோதமாக செயல்படும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம அல்ல என பட்டி வீரக்கோன் மறுப்பு வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தவக்கால நற்சிந்தனை

**"தம் வழியை செம்மைப்படுத்துவோர் கடவுளாம் நான் அருளும் மீட்பைக் கண்டடைவர"**

மறைநூல் அறிஞர்களும், பரிசேயர்களும் ஒரு வெளிவேடமான வாழ்வை வாழ்கின்றனர் என்பதை இயேசு சுட்டிக்காட்டுகின்றார். பரிசேயரைப் பற்றிக் கூறும்போது; இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றார்கள். இவர்கள் உள்ளமோ வெகு தொலைவில் இருக்கிறது. (மாற்கு 7:6) எனக் குற்றம் சாட்டுகின்றார்.பரிசேயர்களிடையே பக்தி முயற்சிகள் இருந்தன. ஆனால் பிறர் நம்மை மதிக்க வேண்டும், பிறர் நம்மை நீதி மான்கள் என அழைக்க வேண்டும் என்ற எண்ணமே அவர்கள் உள்ளத்தில் மேலோங்கி இருந்தது. நாங்கள் இறைவனுக்கும் மனிதருக்கும் உகந்தவர்களாக இருக்க வேண்டுமென அவர்கள் எண்ணவில்லை. நமது சிந்தனை, சொல், செயல், கிறிஸ்துவில் இணைந்து இருந்தால் வெற்றி நிச்சயம். நமது வாழ்க்கை இயேசுவின் மதிப்பீடுகளை அறிந்து கொள்வதில் மட்டுமல்ல மாறாக நமது செயல்கள் இயேசுவை பிரதிபலிக்க வேண்டும். முகமூடி அணிந்தவர்களாக வெளிவேடத்துடன் வாழாமல் நமது சொல்லும் செயலும் பிறர் மேல் அக்கறை கொண்டவர்களாக வாழும்போது நிறை வாழ்வைப் பெறுவோம்.

காவலன்

# கண்காணிப்புக்குழு-புலிகள் அம்பாறையில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதகளுக்கும் மட்டு.அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நேற்று மாலை கொக்கட்டிச் சோலையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போது முக்கிய நான்கு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு இணக்கம் காணப் பட்டது.

14வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அம்பாறை மாவட்டத்தில் இருந்து விடுதலைப புலிகள் இயக்கத்தில் இணைவதாக கண்காணிப்புக் குழுவினர் குறிப்பிட்ட போது,

இயக்கத்தில் விரும்பி இணைந்து கொண்ட 14வயதுக்குட்பட்ட சிறுவர்களை தாம் திருப்பி பெற்றோர்களடம் ஒப்படைத்துள்ளதாக புலிகளின் பிரதிநிதி தெரிவித்தார் அத்துடன் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்ட 25 சிறுவர்களின் விபரங்களை கண்காணிப்புக் குழுவிடம ஒப்படைத்ததுடன்,இனிவரும் காலங்களில் கண்காணிப்புக்குழு முன்னிலையில் இயக்கத்தில் இணைந்த சிறுவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைப்பதென இரு தரப்பும் இணக்கம் கண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைப்பது தொடர்பாக ஆராயப்பட்டபோது தற்போது பெரும் போக வேளாண்மை அறுவடை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அறுவடை முடிந்த பின்னர் இது குறித்து தீர்க்கமான முடிபு எடுக்கப்படும் என்று புலிகளின தளபதி கௌசல்யன் உறுதி அளித்தார்.

காரைதீவு பெரியநீலாவணை ஆகிய முகாம்களுக்கு அருகாமையில உள்ள வேகத் தடைகள் அகற்றப்படவில்லையென புலிகள் தரபபால் சுட்டிக்காட்டப்பட்ட போது இது தொடர்பாக காரைதீவு விஷேட அதிரடிப்படையினருடன் உடனடியாக அத் தடைகளை நீக்க நடவடிக்கை எடுப்பதாக கண்காணிப்புக் குழுவினர் கூறினர்.

இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனும்,போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு சார்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தலைவர் கால்சிப் வேக்யுலிசன் மற்றும் பிரதிநிதிகளான ஆர்.சண்முகநாதன்,ஏ.சௌந்தரநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-5)

## விமானத்தில் கோளாறு
## புலிகளின் யப்பான் பயணம் மூன்று மணிநேரம் தாமதித்தது

(ரோக்கியோ)

யப்பானில் நடைபெறவுள்ள சமதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு ஸ்ரீலங்கா எயர் லைன்ஸ் விமானம் மூலம் சென்ற விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் விமானத்தில் ஒரு சில்லில் காற்றுப் போனமையால் மூன்று மணி நேரம் தாமதமாகியே யப்பான் சென்றடைந்தனர்.

கடடுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை ஏற்றிக் கொண்டு யப்பான நோக்கிப் புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மாலை தீவு விமான நிலையத்தில் தரையிறங்கிய போது அதன் சக்கரம் ஒன்றில் காற்றுப் போனமை அவதானிக்கப்பட்டதை அடுத்தே மாலை தீவில் திருத்தும் பணிகள் மேற் கொள்ளப்பட்டு மூன்று மணி நேரம் தாமதித்தே யப்பான் 'மெரித்தா' விமான நிலையத்தை சென்றடைந்தது.இதனையடுத்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சுவார்தை நடைபெறும இடமான பிறின்ஸ் விடுதியை நேற்று மாலை 3மணிக்கு சென்றடைந்தனர். (வ)

## மட்டு.நகரில் பலத்த பாதுகாப்பு

(மட்டக்களப்பு)

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு நடவடிககைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

பகல் வேளைகளில் நகரின் முக்கிய மையங்கள் மற்றும் கேந்திர நிலையங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாகக் காவல் பணியில் ஈடுபடுகின்றனர்.

இரவு வேளைகளில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

### கப்பல் தாக்கி...

ஒப்பந்தங்கள் உருவாகலாம். அது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்ப்பது பற்றி முடிவை எடுக்கலாம் அதே சமயம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதோ திருத்தி அமைப்பதோ சரியாக இருக்காது என்றே நான் கருதுகின்றேன். அதிக நேரம் இந்தப் பிரச்சினை குறித்து பேசியே ஆக வேண்டும். குறிப்பாக கடற்பகுதி பற்றிய தீர்வான முடிவுக்கு வரவேண்டும் என்றும் பீரிஸ் கூறினார். (இ)

## சுப்ப மாக்கற் நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் ''அன்னை நாகா புட்சிட்டி'எனும் சுப்பமாக்கற் நாளை முற்பகல் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிறுவனத்தை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார். (இ)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்க அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டி கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை 4.30மணிக்கு நடைபெறும். இதில் கட்டுடை விநாயகர் வி.கழகத்தை எதிர்த்து இணுவில் கலாஜோதி வி.கழகம் மோதவுள்ளது.(ந-5)

### அரசு-புலிகள்....

சம்பவம் ஆராயப்படவுள்ளதாகவும் நாளை நடைபெறும் பேச்சு வார்த்தையிலேயே அரசியல் விவகாரஙகள் பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கடபட்டுள்ளதுடன் பொருளாதார உதவிகள் தொடர்பாக ஆராயப்படும் போது அக் கூட்டத்திற்கு யப்பான் துாதுவர் ஜசூசி அகாசி தலைமையில் தொடங்க இருப்பதாகவும் டோக்கியோ செய்திகள் தெரிவிக்கின்றனர். (ம)

### புலிகளோடு....

முன்னர் உலக வங்கி நேரடியாக தொடர்புகளை பேணி வந்ததென்று சுட்டிக் காட்டிய பீற்றர் ஹொரோயிட்,

எனினும் இலங்கை அரசின் அனுமதியுடனேயே விடுதலைப் புலிகளுடன் தாம் பேச்சு நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். (இ)

## புலிகளின் தளபதிகள் திருமலை திரும்பினர்

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்ந்த பின்னர் திருகோணமலை மாவட்டத் தளபதி கேணல் பதுமனும் கும்புறுப்பிட்டி பொறுப்பாளர் ஈகனும் நேற்று 10மணியளவில் இராணுவத்திற்குச் சொந்தமான ஹெலிஹொப்டர் மூலம் திருகோணமலை சென்றடைந்தனர்.

திருகோணமலையில் புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்டமை மற்றும் சில முக்கிய விடயங்கள் குறித்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்,அரசியல் துறைப் பொறுப்பாளா சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோருடன் ஆராய்வதற்காக திருகோணமலை மாவட்டத் தளபதி கேணல் பதுமன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணாவும் வன்னக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

### அரசும்....

தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

முல்லைத்தீவு கடறபகுதியில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பாக எத்தரப்பினரையும் குற்றம் சாட்ட முடியாத நிலை காணப்பட்ட போதும் அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்து வரவேண்டும்.

கப்பல் தாக்கியழிக்கப்படுவதற்கு முன்னர் சந்தேகத்துக்கிடமான கப்பல் ஒன்று பயணிப்பதாக சமாதான செயலகத்திலிருந்து முற்பகல் 10 மணிக்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு தகவல் ஒன்று கிடைத்தது. இதனையடுத்து கண்காணிப்புக் குழு உடனடியாக கடற்படைத் தளபதியுடன் தொடர்பு கொண்டு குறித்த கப்பலை அவதானிக்குமாறும் அக்கப்பலில் இருந்து குறிப்பிட்ட அளவு இடைவெளியை பாராமரிக்குமாறும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் வருமுன் மோதல் எதனையும் தொடங்க வேண்டாம் என்று கடற்படைத் தளபதியிடம் தெரிவித்திருந்தது.

கண்காணிப்பு குழுவின் இவ் வேண்டுகோளுக்கு பதிலளித்த கடற்படைத் தளபதி, இரு கப்பல்களும் பரஸ்பரம் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டதாக தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சியுடன் தொடர்பு கொண்ட போது அவர்களால் உடனடியாக பதில் எதுவும் தரமுடியவில்லை.

இச் சம்பவம் தொடர்பாக கடற்படை வெளியிட்ட அறிக்கையில் புலிகளின் கப்பல் ஒன்று போராயுதங்களை ஏற்றிக் கொண்டு முல்லைத்தீவு கடற்கரையை நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும் இரு கப்பல்களுக்கும் இடையில் வானொலி உரையாடல் நடந்ததாகவும் தெரிவித்தனர்.

கடற் படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட கப்பலைப் பொறுத்தவரையில். கடற்படையினர் கூறுவது போல் ஆயுதங்கள் ஏற்றி வந்ததாக எமக்கு எந்த விதமான தடயமும் கிடைக்கவில்லை. அதேவேளை கடற்படையினரின் கப்பலை நாம் பார்வையிட்டபோது அதில் 30 துப்பாக்கி சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. காயப்பட்ட மூன்று கடற்படையினரையும் நாம் விசாரித்திருந்தோம். கடற்படையினர் எமக்கு காண்பித்த வீடியோப் படத்தில் தாக்கி அழிக்கப்பட்ட கப்பல் எந்தத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது எந்த நாட்டுக்குச் சொந்தமான கப்பல் என்பதையோ, கப்பலில் எந்தவொரு நாட்டினது கொடியும் பறக்க விடவில்லை என்பதையும் அறிய முடிந்தது. இந் நிலையில் அழிக்கப்பட்ட கப்பல் தமது வர்த்தகக் கப்பல் என்று புலிகள் தெரிவித்துள்ள போதும் கப்பல் தொடர்பாக விபரங்களை அவர்கள் தரவில்லை. இந் நிலையில் விசாரணையின் போது எமக்கு கிடைத்த ஆதாரங்களின் படி கடற்படையினர் கூறுவது போல் கப்பலில் ஆயுதம் வந்ததென்றோ புலிகள் கூறுவது போல் வர்த்தகக் கப்பல் தான் என்றோ நிருபிக்க முடியவில்லை.

இந்நிலையில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாது இரு தரப்பினரும் மாற்று வழிகளை கையாள வேண்டும் என்றும் இது தொடர்பாக புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் ஏற்கனவே அறிவித்துள்ளோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன் இது போன்ற சம்பவங்கள் இனி மேல் நடைபெறாது இரு தரப்பினரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கண்காணிப்புக் குழு கேட்டுள்ளது. (வ)

## இலங்கை மீனவர் 19 பேர் கைது

(சென்னை)

இந்திய கடல் எல்லைக்குள் புகுந்து மீன் பிடித்ததாக இலங்கை மீனவர்கள் 19 பேரை தூத்துக்குடியில் உள்ள இந்திய கடலோரக் காவற் படையினர் கைது செய்துள்ளனர்.

கடலோரப் படையினர் கடலில் ரோந்தில் ஈடுபட்டிருந்த போது இவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்ததாகவும்,அவர்களைக் கைது செய்து தூத்துக்குடிக்குக் கொண்டு சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை தபால்கட்டைச் சந்தியில் நேற்று இடம் பெற்ற கார்- சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்த ஆறுமுகம் சத்தியராஜ் (வயது-18) நெடுங்குளம் கொழும்புத்துறையைச் சேர்ந்த இளைஞன் படுகாயம் அடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)


YOGI BEAUTY PARLOUR

LADIES HERBAL BEAUTY CARE & FITNESS CENTRE

யாழ்.நகரில் முதன் முறையாக பெண்களுக்காக எமது அழகு நிலையம் யந்திர சாதனங்கள் மூலமாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நவீன உடற்பயிற்சி சாதனங்கள் மூலமாக பெண்கள் கட்டான உடலமைப்பைப் பெறுவதற்காக பெண்களுக்கான ஜிம் (GYM) பயிற்சி வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

- முகப்பரு சிகிச்சை
- பொடுகு சிகிச்சை
- முடி உதிர்தலுக்கான சிகிச்சை

(High Frequency Treatment)

- Hair Rebonding
- Hair Preming
- Hair Colouring
- Gold facial
- Pearl Facial

Super Sonic Treatment

- கரும்புள்ளிகள் அகற்றுதல் (With Spot Remover)

உங்கள் எண்ணத்தில் எங்கள் கைவண்ணம் சகல மங்கள வைபவங்களுக்கும் ஏற்ற ஒப்பனை அலங்காரங்களை வித்தியாசமாகவும் அழகாகவும் திருப்தியாகவும் செய்து கொள்வதற்கு எம்மை நாடுங்கள்

நீங்களும் அழகுக் கலை நிபுணர்களாக விரும்புகிறீர்களா? எமது அழகு நிலையத்தில் தற்பொழுது அழகுக் கலை Diploma பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

"JENET" Herbal Cosmetics Creams எம்மிடம் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:- MRS.YOGINI SHANMUGANATHAN

Dip in.cosmetology,Beauty Therapy,Hair Dressing &Home Science(India,Co.Sri Lanka)

75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) T.Phone-2222796



உ

Sri Ramajevam

கணினி இயக்குநர் தேவை

புதிதாகத் திறக்கப்படவுள்ள "SRI SAKKARAH COMPUTER EYE" எனும் கணினி நிறுவனத்திற்கு Type Setting . Adobe Photoshop என்பவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பெண் கணினி இயக்குநர்கள் வேண்டப்படுகின்றனர். தகுதியுள்ளவர்கள் இன்று காலை சுப நேரம் 10.49 இருந்து எதிர்வரும் வெள்ளி 21.03.03 வரை தினமும் காலை பழைய நேரம் 10.00 மணி முதல் 12.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :-

SRI SAKKARAH COMPUTER EYE

No 7 1/4 Upstairs Modern Market, Palaly Road, Thirunelveli Junction, Jaffna.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.